
Free Circulation

வெற்றிமணி வெளியீடு 25


# சிவத் தமிழ்





ஈழத்து வன்னிச் சிவாலயங்கள்





2014

தெருமூடி மடங்களும் முடிசூடா மன்னரும்





பிரதம ஆசிரியர்:

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

# மொழிக்கு விழியும் உண்டு!



ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்கு கண் பார்வை கிடையாது.

அப்போது அந்த வழியாக வந்த ஒருவன், " ஏய் கிழவா, யாராவது இந்த வழியாக சென்றார்களா?" என்று மரியாதையின்றி அதிகாரத்துடன் கேட்டான்.

அதற்கு அந்த துறவி "அப்படி யாரும் சென்றதாக தெரியவில்லை" என்று சொன்னார்.

சிறிது நேரம் கழித்து, மற்றொருவன் வந்து "ஐயா, இதற்கு முன் யாராவது சென்றார்களா?" என்று கேட்டார்.

அதற்கு அத்துறவியோ "ஆம், சற்று முன் இதே கேள்வியைக் கேட்டு சென்றான்" என்றார்.

மீண்டும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் வந்தான். அவனும் துறவியிடம் "வணங்குகிறேன், துறவியாரே. இதற்கு முன் இந்த வழியாக யாராவது செல்லும் சப்தம் கேட்டதா?" என்று பணிவுடன் கேட்டான்.

**உடனே துறவி மன்னரே! வணக்கம்.**

**இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான்.**

**அடுத்ததாக ஓர் அமைச்சர் சென்றார்.**

இருவருமே நீங்கள் கேட்ட கேள்வியைக் கேட்டுச் சென்றனர்." என்று சொன்னார்.

உடனே ஆச்சரியத்துடன் மன்னர் "துறவியாரே, உங்களுக்குத் தான் பார்வை இல்லையே. பின்னர் எப்படி முதலில் வீரனும், அடுத்ததாக அமைச்சர் என்றும் சரியாக சொன்னீர்கள்" என்று கேட்டான்.

அதற்கு துறவி "இதை அறிவதற்கு பார்வை தேவையில்லை.

அவரவர் பேசுவதை வைத்தே, அவர் யார், அவரது தகுதி என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்" என்று சொல்லி,

**"முதலில் வந்தவன் சற்றும் மரியாதையின்றியும்,**
**அடுத்து வந்தவரின் பேச்சில் அதிகாரமும்,**
**உங்களது பேச்சில் பணிவும் தென்பட்டது"**

என்று பொறுமையாக விளக்கிக் கூறினார்.

# சிவத் தமிழ்

**அன்பே சிவம்! சிவமே தமிழ்!!**

**மலர் 9 2014 இதழ் 25**



**ஆரம்பம்** 2004

**பிரதம ஆசிரியர்**
**கலைஞானமணி**
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A
**Tel.02351 458862**
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
**ஆன்மீகத்தென்றல்**
**த.புவனேந்திரன்**

கௌரவ ஆசிரியர்
**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**
**திரு.பொ.கனகசபாபதி**
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)
**இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்**

**10** **வது ஆண்டில்**
**சிவத்தமிழ்**
**பக்குவமாய்**
**மலர்கிறது**

**வெளியீடு**
**Dr.M.K.S.Sivakumaran.B.F.A**
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
**Tel.02351 458862**

இலங்கை
**திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A**
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
**யாழ்ப்பாணம்**


# இனிய சங்கமம்



## நீங்களும் தாய் ஆகலாம்

இளமைப் பருவம் சரிபிழை தெரியாத, தெரிந்தும் தெரியாத காளைப்பருவம். அந்தக்காலைப் பொழுதினில் நல்லவையும் கெட்டவையும், கை கோர்த்து நடை பயிலும். காலப் போக்கில் மனம் மெல்ல மெல்ல வடிகட்டத் தொடங்கும்.

பிழையெனத் தெரிந்தும், தெரியாமலும் செய்தவை நம்கண்முன்னே விரியும். நம்மோடு கூட நடை பயின்றவர்கள், எமக்கு முன்வாழ்ந்தவர்கள் இனி வழப்போபவர்கள் இவர்கள் யாருமே பிழையேதும் செய்யாத, செய்யமாட்டாதவர்கள் அல்ல!

பிறரை பிழைசொல்லும் முன்னர், பிழைகளின் காரணங் களையும் பார்க்கவேண்டும். நிலவு வானத்தில் உண்டு. பூக்கள் பூமியில் உண்டு. முட்கள் மலரிலும் உண்டு. நிலவினில் கறையும் உண்டு. எதற்கும் ஒரு பின்னணியுண்டு. எதிலும் ஒரு குறையும் உண்டு.

வளாந்துவிட்டோம் என்பதன் பொருள். பொருளிலோ முதுமையிலோ அல்ல! தன்னைத்தானே புடம்போடு வதில்தான் இந்த மனதின் வளர்ச்சி தங்கியுள்ளது.

உன்னோடு கூட இளமையில் இருந்தவர்களுக்கு, உன் இளமைக்காலக் குறும்புகள் மட்டுமே நிலைத்து நிற்கும். நீ எவ்வளவு நல்லவனாக உன்னைப் புடம்போட்டுக் கொண் டாலும், அவர்கள் அதனை ஏற்க மாட்டார்கள்.

மாகாத்மாகாந்தியாக இருக்கலாம். இல்லை அன்னை தெரேசா அம்மையாராக இருக்கலாம். அவர்களையும் பக்கத்துவீட்டு மனிதர்கள், அவர்களை உடன் பக்குவமாகப் பார்க்கமாட்டார்கள். இது உலக இயல்பு. ஆனால் காலம் அவர்களை இனங்கண்டபின் அட இவர்கள் நம்மோடு இருந்தவர்கள் என்ற பெருமையை தமதாக்கி அவர்கள் மகிழ்வர்.

தவறுகள் துரோகங்கள் இவையாவும் ஒருபோதும் தனிய அரங்கேறுவது இல்லை. பார்ப்பவர்களுக்கு ஓர் தனி யாவர்த்தனமாகப்பட்டாலும், அதன் பின்னணியில் பல பாத்திரங்கள் மறைந்தே இருக்கும்.


வாழ்வில் செய்த தவறுகள், பிழையான முடிவுகள், என ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைந்திருக்கும். அவற்றை விரட்டி யடித்து நல்வராக மனிதநேயமிக்கவர்களாக உருவாகும் போது, இடர்கள் பலப் பல வடிவங்களில் குறுக்கிடலாம்.

நேற்றையவிட, நாளைய விட, இன்றே சிறந்த நாள். எனவே இன்றே நல்லதை நினைத்து நல்வராக வாழத் தொடங்கு வோம். நேற்றை நினைத்தும், நாளையைக் கொன்றும், இன்றைய நாளைத் தொலைத்து விடாதீர்கள்.

எவரையும் நீங்கள் குறைசொல்லாத ஒரு வாழ்வுக்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். உங்களை உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும். எனவே எவரும் உங்களை வாசிக்கமுடியாது. எவரும் உங்களுக்காகச் சுவாசிக்கவும் முடியாது. உங்கள் பாதையை வகுப்பதும், பிறரை நேசிப்பதும் எல்லோரும் நல்லவரே என்று மனம் ஏற்பதும். உங்கள் மனங்களை மலரவைக்கும், பொழுதாகும். தவறுகளை மன்னிப்பதிலும், மறப்பதிலும் தாய்க்கு நிகராக இருங்கள். நீங்களும் தாய் ஆகலாம்.

மு.க.சு.சிவகுமாரன்





சிவப்பிரியன்

# தெருமூடி மடங்களும் முடிசூடா மன்னரும்

நம்முன்னோர்கள் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் நல் மனங்கொண்டவர்கள்.

ஒவ்வொரு செயலும் மனிதனை தெய்வ நிலைக்கு உயாத்தும் வண்ணம் இயல்பாகவே அமைந்திருந்தது.

அன்று இன்றுபோல் போக்குவரத்து வசதிகள் குறைந்த காலம். மாட்டுவண்டி, அது இல்லை என்றால் மிதிவண்டி, அதுவும் இல்லை என்றால் நடைபவனிதான். சும்மா இன்று நாம் உடற் பயிற்சிக்காக இங்கு நடக்கின்றோம். ஆனால் அங்கு சும்மா அல்ல! சுமைகளைத் தலையில் சுமந்துகொண்டு, பல மைல்தூரம் நடந்து அன்றாட தேவைகளை மனிதன் அன்று நிறைவு செய்தான்.

சுட்டெரிக்கும் வெய்யில். தலையில் சுமை, இந் நிலையில் அவன் நடந்துசெல்லும் பாதைகளில் எல்லாம் உறவினர்கள் நண்பர்கள் என்று எவரையும் எதிர்பார்க்க முடியாது. அப்படி என்றால் அவர்களது சுமையை குறைக்கவும் தண்ணீர்த் தாகத்தைப் போக்கவும் யார் உதவுவார்கள். “திக்கற்றவனுக்கு தெய்வம் துணை” என்பார்கள். அப்படி திக்கற்றவர் களுக்குத் தெய்வமாக வாழ்ந்தவர்கள்தான் நம்முன்னோர்கள்.


சுமைகளை இறக்கிவைக்க தெருவோரங் களில் சுமைதாங்கியும், வீட்டுவாசலில் படலை யோடு கூரையிட்ட திண்ணையும் அமைந் திருக்கும்.

அத்திண்ணையிலே பானையில் தண்ணீரும் வைத்து சங்கடப்பட்டு வருவோர்க்கு, சங்கடத் தைப் போக்கி ஆறுதல் அளித்தார்கள். சங்கடம் அகலும் இடம் என்பதால் அந்தப்படலைக்கு சங்கடன் படலை என்ற காரணப்பெயரும் உண்டு.


இதுபோன்று பல இடங்களிலே மக்களுக்கு உதவும் தெரு மூடிமடங்கள் இருந்தன. ஆனால் இன்று பல மடங்கள் கவனிப்பார் அற்று அழிந்துவிட்டன, இந்நிலையில், இன்னும் கம்பீரமாக எழுந்து நின்று தமிழரின் பிறர்நலம் போற்றும் தன்மையை பறைசாற்றி நிற்கும் தெரு மூடிமடமாக பருத்தித்துறை நகரப் பகுதியில், தும்பளைக்குப் போகும் வீதியில் ஓர் மடம் அமைந்துள்ளது.

அதன் பெயரே இந்த மடம் எப்படிப்பட்ட அமைப்பைக் கொண்டிருக்கிறது என்று சொல்லி விடும். தெருவின் இரு பக்கமும் அமைந்துள்ள மடத்தை ஒரே கூரை மூடியிருப்பதால் உண்டான காரணப் பெயரே தெருமூடிமடம்.

தொடர்ச்சி 6ம் பக்கம்







# தூங்கும் முறை பற்றி சித்தர்கள் கூறும் அரிய விளக்கம்..!!!

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்றுதான் உறக்கம் எனும் தூக்கமாகும். இது உடலின் ஆரோக்கியத்தைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனிதனின் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு தூக்கத்தில் தான் கழிகின்றது. உடலிலுள்ள கோடிக்கணக்கான செல் களை தினமும் புதுப்பிக்கவும், உடலின் சோர்வு நீங்கி புத்துணர்வு பெறவும், உடல் வளர்ச்சியை குறிப்பிட்ட வயது வரை பெறவும், தூக்கம் இன்றியமையாததாக உள்ளது.
இரவில் தூங்கும் போதுதான் உடலின் வளர்ச்சி அதிகரிக்கின்றது என்று இன்றைய அறிவியலாளர்கள் கூறுகின்றனர். தூங்குவதைப் பற்றியும் அதில் உள்ள அறிவியல் உண்மைகளையும் சித்தர் பெரு மக்கள் தங்கள் நூல்களில் வடித்துள்ளனர்.

தூங்குவதற்கு ஏற்ற காலம் இரவு மட்டும் தான் என்பது இயற்கையின் விதிகளில் ஒன்று. பூமியின் தட்ப வெட்ப நிலைகள் மாறி இரவில் குளிர்ச்சி பொருந்திய சூழ்நிலைதான் தூங்குவதற்கு ஏற்ற காலமாகும்.

ஆனால் இன்றைய நாகரீக உலகில் நிறுவனங்களில் வேலை பார்க்கும் பலரும் இரவில் கண் விழித்து பகலில் தூங்குகின்றனர். இதனால் என்ன தீமைகள் விளையும் என்பது பற்றி சித்தர் பாடல் ஒன்று.

**சித்த மயக்கஞ் செறியும் புலத்தயக்க மெத்தனுக்**
**கமைந்த மென்பவை களித்தமுற வண்டுஞ் சிலரை**
**நாயாய்ப் பன்னோய் கவ்வுமிராக் கண்டுஞ் சிலரை**
**நம்பிக் காண்**

இதன் விளக்கம் :-
இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலன்களில் உடலில் சோர்வு, பயம், படபடப்பு, அக்னி மந்தம், செரியாமை, மலச்சிக்கல், போன்ற நோய்கள் எளிதில் பற்றும்.
வேட்டைக்குச் செல்லும் வேடருடைய நாய்கள் இரையைக் கவ்வுதல் போல் இரவில் நித்திரையில்லாதவரை பற்பல நோய்கள் கவ்விக் கொள்ளும்.
எந்த திசையில் தலை வைத்து படுக்க வேண்டும் என்பதை சித்தர்கள் அன்றே தெளிவாகக் கூறியுள்ளனர்.
உத்தமம் கிழக்கு, ஓங்குயிர் தெற்கு, மத்திமம் மேற்கு, மரணம் வடக்கு.

கிழக்கு திசையில் தலை வைத்து படுப்பது மிகவும் நல்லது. தெற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் ஆயுள் வளரும். மேற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் கனவு,அதிர்ச்சி உண்டாகும். வடக்கு திசையில் ஒரு போதும் தலை வைத்து தூங்கக் கூடாது.

இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக் கொண்டுள்ளனர். வடக்கு திசையில் இருந்து வரும் காந்தசக்தி தலையில் மோதும் போது அங்குள்ள பிராண சக்தியை இழக்கும். இதனால் மூளை பாதிக்கப் படுவதுடன், இதயக் கோளாறுகள், நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

மேலும் மல்லாந்து கால்களையும், கைகளையும் அகட்டி வைத்துக் கொண்டு தூங்கக் கூடாது. இதனால் இவர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் பிராண வாயு உடலுக்குக் கிடைக்காமல் குறட்டை உண்டாகும். குப்புறப் படுக்கக் கூடாது, தூங்கவும் கூடாது.

4ம் பக்கத் தொடர்ச்சி

புராதன இலங்கையில் பருத்தித்துறை புகழ் பெற்ற நகரமாயிருந்ததற்குக் காரணம் கொழும்பு காலியிலிருந்து மட்டுமல்ல இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, பர்மா முதலான நாடுகளிலிருந்தும் பல்வேறுபட்ட பொருட்கள்(பருத்தித்துணி, பட்டுத்துணி தந்தத்தினால் செய்யப்பட்ட பொருட்கள், வாசனைத் திரவியங்கள், கோதுமை) அங்குள்ள துறை முகத்தில் இறங்கியதும் அதுபோல் பல்வேறுபட்ட பொருட்கள்( அரிசி, வெங்காயம், புகையிலை) அங்கிருந்து ஏற்றப்பட்டதும் தான். அதாவது சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே பொருட்களை ஏற்றுபவர்களுக்கும், இறக்குபவர்களுக்கும் பருத்தித் துறையில் நல்ல வேலை வாய்ப்புக் காணப்பட்டது.

முக்கியமாக, இலங்கையில் நிலவும் கால நிலைக்கு ஏற்ற துணியாகையால் பருத்தித் துணி அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டது. பருத்தி அதிகளவில் இறக்கப்பட்ட துறை என்பதாலேயே பருத்தித்துறை என்ற காரணப் பெயர் உண்டாயிற்று என்ற விடயம் அனேகர் அறிந்ததே.

இவ்வாறு பொருட்களை ஏற்றுபவர்களும், இறக்குபவர்களும் இளைப்பாறுவதற்காகக் கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மடமே தெருமூடிமடமாகும். இங்கு தங்கி இளைப்பாறுபவர்கள் தமது களைப்பை இறக்கி வைத்து மீண்டும் புத்துணர்வுடன் பயணத்தைத் தொடர்வர்.

தெருமூடி மடத்தின் அமைப்பைப் போன்றே பிற்காலத்தில் ஆலயத் திருவிழாக் காலங்களில் அடியவர் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல்கள் உருவாகின. இவை தெருவை மூடி ஓலையால் வேயப்பெற்ற தற்காலிக பந்தலாக அமைந்திருக்கும்.



**சங்கடன் படலை**

இதன் இரு மருங்கிலும் அடியவர்களுக்கு மோர்த் தண்ணீர். சக்கரைத்தண்ணீர் உறுகாய் தண்ணீர் என தாகசாந்திக்கு கரைத்துக் கொடுப்பது வழக்கமாயின.

முன்னோர்கள் மனிதர்களுக்கு மட்டுமன்றி தம்மை அண்டிப்பிழைக்கும் ஆடு மாடுகளுக்கு என நீர்த்தொட்டிகளையும். கேணிகளையும் அந்தக்கேணியருகே ஆடு மாடுகள் முதுகு தேய்க ஆவுரோஞ்சிக்கல்லையும் நட்டு வைத்தனர்.

ஒரு மன்னன் மக்களுக்குச் செய்ய வேண்டியதை, அன்று மக்களே முடிசூடிய மன்னர்களாக இருந்து, தர்ம நெறிதழைத் தோங்க வழிசெய்தனர். மக்களுக்கு தேவையானதை தாமே முன்வந்து செய்யும் தொண்டு மகேசனுக்கு செய்யும் தொண்டாகவே கருதினர். இதனையே மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்றனர்.

படங்கள் தகவல் உதவி: வல்வை அலையோசை

---

# தூங்கும் முறை......

இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும் இருக்கும்படி கால்களை நீட்டி இடது பக்கமாக ஒருக்களித்து படுத்து தூங்கவேண்டும். இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரியகலையில் ஓடும். இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும். மேலும் இதனால் உடலுக்குத் தேவையான வெப்பக்காற்று அதிகரித்து பித்தநீரை அதிகரிக்கச் செய்து உண்ட உணவுகள் எளிதில் சீரணமாகும். இதயத்திற்கு சீரான பிராணவாயு கிடைத்து இதயம் பலப்படும்.

வலது பக்கம் ஒருக்களித்து படுப்பதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திரகலை சுவாசம் ஓடும். இதனால் பனிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும். இதனால் உடலில் குளிர்ச்சி உண்டாகும்.

இரவில் உண்ட உணவு சீரணமாகாமல் புளித்துப் போய் விஷமாக நேரிடும். சித்தர்கள் தான் அன்று சிறந்த விஞ்ஞானிகள்.

அவர்கள் மெய் ஞானத்தால் உணர்ந்ததை இன்று விஞ்ஞானத்தால் உணர்கின்றான் மனிதன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்





# மலை உறை கடவுள்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

கடவுள் எங்கே இருக்கிறார்? இக்கேள்வி எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறது. அதற்குரிய மறுமொழியைத் தெளிவாகக் கூறுவது கடினமானது. ஆனால் இன்று உலகத்திலே தோன்றியுள்ள எல்லா மதங்களும் தம்மால் இயன்றவரை கடவுள் பற்றிய விளக்கத்தைக் கொடுக்க முயன்று கொண்டிருக்கின்றன. கடவுள் மனிதரைவிடப் பேராற்றல் படைத்தவர் என்பதை எல்லா மதங்களும் எடுத்துரைத்துள்ளன. இன்னும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பொறிமுறை வளர்ச்சியும் கடவுளை நாம் விரைவில் காட்டுவோம் என்று மார்தட்டி நிற்கின்றன.

எனவே இத்தகைய எல்லோரும் காண விரும்பும் கடவுளைத் தேடும் முயற்சியில் ஒருவர் ஈடுபடும்போது அவருக்கு வழிகாட்டவென நமது முன்னோர் பல பதிவுகளைச் செய்துள்ளனர். இன்று நாம் கோவிலுக்குச் சென்றால் கடவுளை வழிபடலாம். நமது தாய் கற்பித்த முறைமை இது. பெண்களிடம் கடவுளைப் பற்றிய வழிபாட்டுச் சிந்தனை இயற்கையாகவே இணைந்திருந்தது. கோவில் என்ற அமைப்புத் தோன்றுவதற்கு முன்னரேயே கடவுள் உறையும் இடங்கள் மக்களால் இனங்காணப்பட்டுள்ளன. இயற்கையின் பேராற்றல்தான் கடவுள் என்ற தெளிவு அவர்களிடமிருந்தது. தம்மைச்சுற்றியுள்ள இயற்கையே தமக்குத் தேவையானவற்றை எல்லாம் வழங்குகிறது என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்துகொண்டனர். மேலும் இயற்கையின் பேராற்றலைத் தம்மால் கட்டுப்படுத் தவோ, வெல்லவோ முடியாத கடவுளாக வழிபடத் தொடங்கினர். மனித ஆற்றலால் கடவுளைக் கடக்க முடியாதெனக் கட்டுப்பாட்டுடன் பணிந்து வாழ்ந்தனர்.

இது மனித வாழ்வில் வழிபாட்டின் தொடக்கமாக அமைந்தது. கடவுள் நம்மை வழிநடத்த நம்மோடு என்றும் இருக்கிறார் என்ற நினைவோடு தமிழ் மக்கள் வாழ்ந்ததைத் தமிழிலக்கியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரேயே தெளிவாகப் பதிவு செய்துள்ளன.

அந்தப் பதிவுகளை இன்று மீள்பார்வை செய்யும்போது இன்னொரு விளக்கமும் நமக்குக் கிடைக்கிறது. வழிபாட்டுப் பயிற்றலை பெண்களே மேற்கொண்டிருந்தனர். அவர்கள் தமது தாயிடம் பெற்ற வழிபாடு பற்றிய நம்பிக்கையை எல்லோருக்கும் ஊட்டினர். சிறப்பாகத் தாயாகி நின்று அவர்கள் செய்த வழிபாட்டுப் பயிற்சி இன்று வரையும் தொடர்கிறது. தாய் கொடுக்கின்ற அந்தநம்பிக்கையை உணர்ந்த தலைமுறையினராக நாம் வாழவேண்டும். ஆனால் அந்த நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாத இளையதலைமுறையும் உருவாகி வருவதையும் நாம் உணர்கிறோம். இத்தகைய இளையோரை வழபாடு பற்றிய எண்ணத்திலே திசைதிருப்ப வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

இயற்கையை உற்று நோக்கும் எண்ணம் அற்றவ ராக இளையோர் வலம்வருகின்றனர். அவர்களுக்கு ஒரு தேடல் உணர்வு ஊட்டப்படவேண்டும். பெண்களின் வழிபாட்டு நம்பிக்கை எவ்வாறு இயற்கையோடு இணைந்திருந்தது என்பதை அவர்கள் அறியவேண்டும். அதற்காக ஒரு செய்தி இங்கு மீள்பதிவு செய்யப்படுகிறது.

தொடர்ச்சி மறுபக்கம்

ஐங்குறுநூறு எனப் பெயர்பெற்ற ஒரு பழைய நூல். 500 பாடல்களின் தொகுப்பு. பண்டைத் தமிழர் வாழ்ந்த நிலத்து வாழ்வியல் நடைமுறைகளை எல்லாம் விளக்கும் பாடல்கள். இயற்கை யோடு இணைந்து கடவுளை வழிபட்ட நிலையை இன்றும் உணரவைப்பவை. அதை எடுத்துக் காட்ட ஒரு பாடல் வருமாறு.

குன்றக் குறவன் காதல் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையள்
மலர்ந்த காந்தள் நாறிக்
கலிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே.

(ஐங்குறுநூறு: 259)

சிறிய குன்றிலே வாழ்கின்ற குறவனுடைய அன்புக்குரிய மகள் வழிபாடு செய்கின்ற காட்சியைப் பழந்தமிழ்ப் புலவரான கபிலர் பாடியுள்ளார். வழிபாட்டிற்காக அந்தப் பெண் தனது வீட்டிற்கு அருகே எல்லோரும் கூடுகின்ற பொதுவான இடத்தில் நிற்கின்ற வேங்கை மரத்தின் மலர்கள் சில வற்றைக் கொய்துகொண்டு வந்திருக்கிறாள். அத்துடன் பலியிடும் பொருளாகத் தேனையும் எடுத்து வந்திருக்கிறாள். அவள் வழிபடுகின்ற கோலம் பாடலிலே சொல்லோவியமாய்த் தெரிகிறது.

மலையிலே கடவுள் உறைகிறார் என்பது அவளது அசையாத நம்பிக்கை. அவளுடைய தாயின் வழிவந்த உணர்வு. கடவுளிடம் முதலிலே அவள் கேட்பது தனது குலத்தோர் நலமாக வாழவேண்டும் என்பதே. வழிபாடு தன்னலமற்றது என்ற உயர்ந்த பண்பாட்டுப் பயிற்சியைப் பெற்ற அவள் அதையே செயங்படுத்துகிறாள். உயர்ந்த மலையில் உறையும் கடவுளை வழிபடும்போது பொதுநலத்தோடு வழிபடுகிறாள். மனத்தைக் கடவுளிடம் ஒருப்படுத்த இரண்டு வழிபாட்டு நடை முறைகளை மேற்கொள்கிறாள். முதலிலே வேங்கை மலர்களைத் தூவுகிறாள். அவள் அகக் கண்ணில் கடவுள் என்னும் பேராற்றலின் வடிவை உருவகம் செய்கிறாள்.

அடுத்து மலையின் விளைபொருளான இனிய தேனைப் பலியாகக் கடவுளுக்குப் படையல் செய்கிறாள். தேன் இனிமை யானது. மலைவாழ் மக்களின் உணவுக்கு இனிமை கூட்டுவது. நீண்ட காலம் பழுதுறாமலிருப்பது. உடல்நலம் தரும் மருத்துவ குணமுடையது. இயற்கையின் இனிய கொடையாகக் கிடைப்பது. அத்தேனை அவள் காந்தள் மலர் போன்ற கையால் மனம் உவந்து பலியிடுவதால் கைகள் ஈரம் கொண்டன. தேனின் நறுமணம் பெற்றன. இவ்வாறு வழிபடும்போது அவள் கண்களிலும் உள்ளம் உருகியதால் கண்ணீர் தெரிகிறது. பாடலின் நிறைவான தொடர் 'எம் அணங்கியோளே' என அமைந்து இன்னொரு செய்தியையும் நமக்குக் கூறுகிறது.

இந்தப் பெண்ணை விரும்புகின்ற ஆணின் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. தன்னைப் பற்றியது ஓர் அணங்கு என அவன் குறிப்பிட்டுள்ளான். அணங்குதல் என்றால் நெருங்கியிருத்தல் என்று பொருளாகும். பண்டைத்தமிழ் இலக்கியத்தில் 'அணங்கு' என்ற சொல் பரவலாக ஆண் கூற்றிலே பயன்படுத்தப்பட்டுள்ளது. அணங்கு என்ற சொல் தாக்குதல் என்ற பொருளுடையது என்றுங் கருதுகின்றனர். ஆனால் இச்சொல் உண்மையில் ஓர் ஆணின் மன உறுதிப்பாட்டைக் குலைப்பதையே குறிப்பது. இப்பொருளை அநுபவமுள்ள ஆண்கள் அனைவரும் அறிவர்.
அழகான ஒரு பெண்ணைக் கண்டு அவளையே தனது வாழ்க்கைத் துணையாக அடைய விரும்பும் ஆண் அணங்கினால் தாக்கப்பெற்றவனாகிறான். இப்பாடலிலும் இந்த அநுபவமே குறிப்பிடப் பட்டுள்ளது.



வழிபாடு செய்கின்ற பெண்ணின் உள்ளத்தில் ஒரு துன்பம் மறைந்து இருப்பது அவள் கண்களில் துளிர்க்கும் நீரால் உணர்த்தப பட்டுள்ளது. 'கலிழ்ந்த கண்ணள்' என்ற தொடர் அவளுடைய புறத்தோற்றத்தை மட்டும் அன்றி உள்ளத்தின் உட்கிடையையும் காட்டி நிற்கிறது.

வெளிப்படையாக சொல்லமுடியாத ஒரு அவலநிலை. மலைநாட்டில் வாழும் அவள் வாழ்வில் ஒரு மாற்றம். மரபான செயற்பாடாக அன்றி வேறுபட்ட ஒரு நிலைப்பாடு. அதனால் மனதிலே குழப்பம். அவள் கண்ட ஓர் ஆடவன். அவனோடு இணைந்து வாழ வேண்டும் என்ற விருப்பம்.



ஆனால் அந்த விருப்பம் நிறைவேறுமா என்ற குழப்பநிலை. இந்நிலையை அவள் யாரிடமும் கூறமுடியாமல் தவிக்கிறாள். இந்த நிலையில் தன் மனதை நெறிப்படுத்தவே குறவரது மரபான வழிபாட்டு நடைமுறையை மேற்கொள்கிறாள். மலர் தூவி வழிபாடு செய்யும்போது மனம் பண்படும் என்பது அவளுக்குப் பயிற்றப்பட்டிருந்தது. பேராற்றல் படைத்த கடவுளை மலை வடிவாகப் பார்ப்பது ஒரு புறக்காட்சி.

ஆனால் அந்த ஆற்றல்கொண்ட மலையைக் கடவுளாகக் காண்பது அகக் காட்சி. மனித நிலையில் மனம் அலைபாயும்போது அதனைச் சீர்மியம் செய்வதற்கு மலர்தூவி வழிபடுவது சிறந்தது. மலர்தூவும் செயற்பாடு இயற்கை பற்றிய எண்ணத்தை மனிதர் மறவாதிருக்க வழி செய்யும். பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் தன் அவலநிலையிலிருந்து அமைதி காண முயற்சி செய்கிறாள்.



கடவுள் என்னும் இயற்கையின் பேராற்றலை நினைந்து செயற்படும்போது தன்னுடைய மனக் குழப்பமும் தீரும் என நம்பி வழிபாடு செய்கிறாள். இதனையே பாடல் தெளிவாகக் கூறுகிறது.

கடவுள் எங்கே இருக்கிறார் என்ற கேள்விக்கு இந்தப் பாடல் நல்லதொரு மறுமொழியாக அமைந்துள்ளது. மனக்கவலை மாற்ற வழிபாடு உதவும் என்ற நம்பிக்கை ஒரு தொடர் செயற்பா டாக இன்றுவரை தொடர்கிறது.

இயற்கை வழிபாட்டைத் தொடர்ந்து உருவ வழிபாடு தொடங்கிய போது மலையிலே பல கோயில்கள் குடைந்து நிறுவப்பட்டன.
மலைப்பிரதேசத்திலே பல்வேறு வகையான மலர்கள் உள்ளன. அவற்றைக் குறிஞ்சிப்பாட்டு என்னும் நூல் தொகுத்துக்கூறியுள்ளது. எனவே மலையிலே அமைந்த கோயில்களில் உள்ள இறையுருவங்களுக்கு அம்மலர்களைக் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டது.

மலர்களைப் பல்வேறுவிதமாக மாலைகளாக்கும் புனைதிறன் தோற்றம் பெற்றது. இண்டை, கண்ணி, தார், அலங்கல், தொங்கல், தொடலை, கதம்பம், கோதை, மாலை எனப் பல்வேறு வண்ணப்புனைவுகள் செய்யப்பட்டன. மலர்கள் பயிரிடும் விளைநிலங்கள் உருவாகின.

நறு மணமும் வண்ணங்களும் வழிபாட்டில் இடம்பெற்றதால் அதைக் கண்டு மனம் பரவசப் படலாயிற்று. கடவுளின் இருப்பிடம் கோயிலும் என்ற நம்பிக்கையும் தோன்றியது. கடவுள் உறையும் கற்கோயில்கள் உருவாகியபோது அத்துடன் ஆடல், பாடல், சிற்பம், ஓவியம் எனப் பல்வேறு கலை நுட்பங்களும் இணைந்து கொண்டன. கோயில் ஒரு கலைக் களஞ்சியமாக ஊருக்குப் பொலிவு தரும் நிலையமாகியது.

மக்கள் பண்பாட்டுப் பயிற்சிக் களமாகப் பல்வேறு நாடுகளிலும் கோயில் சிறப்புப் பெற்றது. மலை உறை கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற உண்மையும் தெளிவாயிற்று.



# கடிவாளம்

கவியரசு கண்ணதாசன்

நமது உடம்பு எங்கே இருக்கிறது என்பது முக்கியமல்ல் மனம் எங்கே இருக்கிறது என்பது தான் முக்கியம்.

உடம்பு போகின்ற இடங்களுக்கெல்லாம் மனது தொடர்ந்து வருவதில்லை. உடம்பை மயிலாப் பூரிலே உட்கார வைத்து விட்டு, மனது சிங்கப்பூர் வரையிலே சென்று திரும்பிவிடும்.

அதைத்தான் சிவவாக்கியர் மிக அழகாகச் சொன்னார், மனத்திலே அழுக்கைச் சுமந்தவன் காட்டிலே போய் இருந்தால் கூட அந்த அழுக்கு அவனோடேயே இருக்கும்' என்று.
மனத்திலே அழுக்கில்லாதவன், ஒரு தாசியின் அருகிலே அமர்ந்திருந்தால் கூட, அவன் மனது அந்த தாசியை நாடுவதில்லை. பிறப்பை அறுத்து விட்ட பிறவியாகவே அவன் அங்கே காட்சியளிக்கிறான். ஆகவே, நன்மைகள் தீமைகள் அனைத்துமே மனத்தின் கண் தான் இருக்கின்றன என்பதனை, நான் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

அனைத்தும் துறந்தும் கூட, கூட வந்த நாயைத் துறக்க முடியாத பத்ரகிரியாரைப் போல, எல்லாவற்றையும் துறந்தாலும் கூட இந்த மனது செய்கின்ற வேலையைத் துறக்க முடியாமல் நாம் அவதிப்படுகிறோம்.

காதி விளையாடி இருகை வீசி வந்தாலும்
தாதி மனம் நீர்குடத்தே தான்'
என்றார் பட்டினத்தார்.

என்னதான் ஆட்டம் போட்டுக் கொண்டு போனாலும், தாதி நீர்க் குடத்திலே தான் மனத்தை வைத்திருப்பாள். தாதி என்றால் வேலைக்காரி.தண்ணீர் தூக்கி வருகின்ற வேலைக்காரி, என்னதான் வேடிக்கைப் பேச்சுப் பேசட்டும், விளையாடட்டும், அவள் இடுப்பிலே இருக்கிற குடத்தின் மீதும், தண்ணீரின் மீதும்தான் மனது லயித்திருக்கும்.
ஞானிகளுடைய உள்ளமும் அப்படியே தான். அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதிலே லயித்து விடுவார்கள்.
ஆனால், சராசரி மனிதன் அவஸ்தைப்படுவ தெல்லாம் இந்த மனத்தின் போக்கினாலே தான்.

கல்யாணத்தில் ஒரு கருப்புப் பெண் கிடைத்தால், மனது சிவப்புப் பெண்ணுக்காக ஏங்குகிறது.
சிவப்புப் பெண் கிடைத்து விட்டால், கருப்புப் பெண்ணைக் காணும் போதெல்லாம் ஏங்கு கிறது.

ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுக்கு வீட்டுச் சாப்பாடு பிரமாதமாக தோன்றுகிறது. வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுக்கு ஓட்டல் பலகாரம் மிக அற்புதமாகத் தோன்று கிறது.

மாறுபட்ட உணர்வுகளே மனத்தின் லயங்கள்.

மனிதன் தன்னை அறியும்படி வைப்பதும் அந்த மனதுதான் தன்னை அறிய விடாமல் தடுப்பதும் அந்த மனதுதான்.

ஆகவே, தன்னை அறிய வேண்டிய மனிதன், முதன் முதலிலே வெல்ல வேண்டிய பெரிய எதிரி மனது.
உடம்பிலே ரத்தக் கொதிப்பு ஏறுவதற்கு உடம்பு மட்டும் காரணமல்ல் மனத்தின் டென்ஷன் தான் முக்கியமான காரணம் என்று மருத்துவ நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும் கூறுகிறார்கள்.

ஒரு மனிதனைப் பார்த்து அனைவரும், அடடா! எவ்வளவு அழகாக நீ இருக்கிறாய்' என்று சொல்லிக் கொண்டே இருக்கட்டும். அவன் மனது அதைக் கேட்டுக்கேட்டு, தான் அழகாக இருப்பதாகவே நினைத்து, பூரித்துப் பூரித்து அவனுக்கு இல்லாத ஒரு அழகு முகத்திலும், மனத்திலும் வந்து விடுகிறது.

புவனத்திலுள்ள நிபுணர்களில் விஞ்ஞான நிபுணர்களைக் கூடப் பெரிதாக நினைப்ப தில்லை ஆனால், மனோதத்துவ நிபுணர் களையே உலகம் பெரிதும் மதிக்கிறது.

தொடர்ச்சி 27 ம் பக்கம்



# மன்னிக்காதவன் ஆன்மீக ஏழை !

சேவியர்

## கேட்கும் முன்னாலேயே மன்னிப்பது இறையின் முதல் நிலை !

ஒரு மனிதன் தேவ நிலையை அடையவேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும்" என்கிறது பகவத் கீதை. இஸ்லாம் கடவுளை "அல் கபிர்" என்கிறது, "முழுமையாய் மன்னிப்பவர்" என்பது அதன் அர்த்தம். "மன்னிக்க மறுப்பவர்கள் சுவர்க்கம் செல்லவே முடியாது" என்கிறது கிறிஸ்தவம். மதங்கள் எல்லாம் இப்படி மன்னிப்பைக் குறித்து விலாவரியாகச் சொன்னாலும் மனிதனுடைய மனதில் மட்டும் மன்னிப்பு குதிரைக் கொம்பாகத் தான் முளைக்கிறது.

மன்னிப்பது கோழைகளின் செயல் என்றே பலரும் நினைக்கிறார்கள். "எதிரி நாட்டு மன்னனைப் போரிட்டு அழிக்கும் பரம்பரை நாம்" என மீசை முறுக்குகிறார்கள். உண்மையில் மன்னிப்பது தான் போரை விட வீரமானது. போர் உடல்களைத்தான் வெற்றி கொள்ளும், மன்னிப்பு மனதையே வெற்றி கொள்ளும். இதைத்தான் மகாத்மா சொன்னார், "மன்னிப்பு பலவான்களின் செயல், பலவீனர்களால் மன்னிக்க முடியாது.

கைகுலுக்கிக் கொள்வது நாம் நட்புடன் இருக்கிறோம் என்பதன் வெளி அடையாளம் மட்டும் தான். மன்னிப்புடன் மனங்களைக் குலுக்கிக் கொள்வது தான் உண்மையான நட்பின் அடையாளம். அடையாளங்கள் வாழ்க்கையை அழகாக்குவதில்லை, அவை காகிதப் பூக்களை ஒட்டி வைத்த முல்லைக் கொடி போல செயற்கையின் பிள்ளையாய் அர்த்தமிழக்கும்.

மன்னிக்கத் தெரிந்த மனிதர்கள் ஈகோ எனும் எல்லைக்கு வெளியே நின்று வாழ்க்கையை அதன் அழகியலில் லயிப்பவர்கள். மனிதத்தின் புனிதமான பாதைகளில் பயணிக்கும் பாதங்கள் அவர்களுடையவை.

வீல் சேரில் அமர்ந்திருந்தாள் அந்த ஐந்து வயதுச் சிறுமி கேய் லீ ஹேரியட். இடம் அமெரிக்காவின் பாஸ்டன் நகர நீதிமன்றம். 2003-ம் ஆண்டில் அவளுக்கு மூன்று வயதாக இருக்கும்போதுதான் அந்தத் துயரம் நடந்தது.


ஒரு நாள் கேய் தனது சகோதரியுடன் உற்சாகமாய்ப் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தபோது மூன்று இரக்கமற்ற துப்பாக்கிக் குண்டுகள் எங்கிருந்தோ பறந்து வந்தன. அவளுடைய முதுகெலும்பை உடைத்தன. உற்சாகப் பறவைக்கு வீல் சேர் வாழ்க்கையானது. நீதிமன்றத்தில் அவளுக்கு முன்னால் நின்றிருந்தான் இருபத்து ஒன்பது வயதான ஆண்டனி வாரன். நீதிமன்றம் அவனைக் குற்றவாளி என தீர்ப்பிட்டது.

சிறுமி கேய் அவனருகில் சென்றாள். திடீரென தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பார்த்தவர்களெல்லாம் கலங்கினார்கள். பின் சிறுமி அவனிடம் சொன்னாள், "நீங்கள் செய்தது தவறு. ஆனாலும் உங்களை நான் மன்னிக்கிறேன்." ஐந்து வயதுச் சிறுமியின் அச்செயல் அந்த நீதிமன்றத்தையே ஸ்தம்பிக்க வைத்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் நெகிழ்ந்தார்கள். அதுவரை சுட்டவன் மீது கொடும் பகையுடன் இருந்த அவளுடைய தாயும் உடனடியாக அந்த நபரை மன்னித்தார்! தவறிழைத்தவன் கதறினான்.

இந்த நிகழ்வு அமெரிக்காவின் அனைத்துத் தொலைக் காட்சிகளிலும் ஒளிபரப்பாகி பலரையும் தொட்டது.

மன்னிப்பு எனும் செயல் மனிதகுலத்துக்கே உரிய மகத்துவமானது. மிகவும் எளிதாகச் செய்யக் கூடிய இந்தச் செயலைச் செய்வதில் தான் இன்று பலருக்கும் உலக மகா தயக்கம். அதனால்தான் நமது வாழ்க்கை சண்டை, அடிதடி, வெறுப்பு, கோபம், நோய்கள் என துயரத்தின் தெருக்களில் நொண்டியடிக்கிறது.

ஒருவர் உங்களைப் பற்றி ஏதோ தவறாகச் சொல்லி விட்டார் என்று வைத்துக் கொள் ளுங்கள். அந்த நபர் மீது நீங்கள் கோபம் கொள்ளும் போது உங்களுடைய மனதில் ஒரு கல்லை வைக்கிறீர்கள். அது கனக்கிறது. அந்தக் கோபத்தை மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க ஒவ்வொரு கல்லாய் அடுக்கு கிறீர்கள்.



பாரம் கூடுகிறது, உடல் நிலை பாதிக்கிறது. ரத்த அழுத்தம் எகிறுகிறது. எல்லை மீறினால் மாரடைப்பே வந்து விடுகிறது. ஆனால் இந்த நிகழ்வின் துவக்கத்திலேயே நீங்கள் அந்த நபரை மன்னித்துவிட்டால் அத்துடன் சிக் கல்கள் எல்லாம் முடிந்து விடுகின்றன

நீங்கள் ஒரு நபரைப் பார்த்துக் கத்தியால் குத்தினால் அவருக்குக் காயம் ஏற்படும். ஆனால் ஒரு நபர் மீது கோபமாய் இருக்கிறீர்களென்றால் அவருக்கு எதுவும் நேராது.
மாறாக அந்தக் கோபம் உங்களுக்குத்தான் கெடுதல் உண்டாக்கும். நீங்கள் யார் மீது கோபமாய் இருக்கிறீர்களோ அவர் இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் தனது வேலை யைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

எனவே மன்னிப்பு என்பது முதலில் உங்களுக்கு நீங்கள் செய்யும் நல்ல செயல் என்பதை உணருங்கள்.
இன்றைய மனித உறவின் பலவீனங்கள் பலவேளைகளில் திடுக்கிட வைக்கின்றன. பெற்றோரை மன்னிக்க மறுக்கும் பிள்ளைகள், பிள்ளைகள் மீது வெறுப்பு வளர்க்கும் பெற்றோர், அரிவாளுடன் அலையும் சகோ தரர்கள், வன்மத்துடன் திரியும் தம்பதியர்! இவை எல்லாவற்றுக்குமான சர்வ ரோக நிவாரணி மன்னிப்பு என்பதை எப்போதாவது உணர்ந்ததுண்டா ?

மன்னிப்பைப் பற்றி மருத்துவம் சொல்வது கதிகலங்க வைக்கிறது. “நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் ரொம்ப வலுவாக மாறிவிடுகிறது.

அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப் போகிறது. அதன் பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகி விடும்“ என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள்.


“மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கி றார்கள்“ என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள்.


“கேம்பைன் பார் பர்கிவ்னஸ் ரிசர்ச்“ சுமார் 48 ஆராய்ச்சிகளின் முடிவை விலாவரியாக எடுத்துரைக்கிறது. எல்லா ஆராய்ச்சிகளுமே மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாகவும் ஆனந்த மாகவும் இருப்பதாக அடித்துச் சொல்கின்றன.

மன்னிப்பு சட்ட திட்டங்களால் வருவதில்லை. மன்னிக்கும் மனதுடைய மக்களுடன் பழகும் போது நம்மை அறியாமலேயே அந்த நல்ல பழக்கமும் நம்முடன் வந்து ஒட்டிக் கொள்கிறது.

மன்னிக்கும் மனநிலை பெற்றோருக்கு இருந்தால் பெற்றோர்களைப் பார்த்து வளரும் குழந்தைகள் மன்னிக்கும் மனநிலையை எளிதாகவே பெற்று விடுவார்கள்.
குழந்தைகளுக்கு மன்னிக்கும் மனம் இயல் பாகும் போது எதிர்கால சமூகம் வன் முறைகளின் வேர்களை அறுத்துவிடும்.

**தொடர் 14ம் பக்கம்**





பிருந்தாபன்

# சம்புநாதீஸ்வரர் ஆலயம்

இலங்கையில் பிரசித்திபெற்று விளங்கிய பழம் பெரும் சிவாலயங்களில் சுயம்பு சேஷ் திரமாகிய சம்புநாதர் சேஷ்திரம் என அழைக் கப்படும் சம்புநாதீஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும்.

இவ் ஆலயம் கீரிமலை நகுலேஸ்வரம், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், ஆகிய தலங் களை இணைக்கின்ற வீதியின் மத்திய ஸ்தானத்தில் அமைந்துள்ளது. மேலும், தட்சண கைலாசமாகிய திருகோண கோ ணேஸ்வரத்திற்கு வடக்கு திசையிலும், இராமசேதுவுக்கு (இராமேஸ்வரத்திற்கு) கிழக்கு திசையிலும் (குறிப்பாக வலிகாமம்-மேற்கில்) இந்த ஆலயம் அமைந்திருந்ததாக தட்சண கைலாய புராணம் - சுயம்புநாத படலத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றையுடைய இந்த ஈஸ்வரத்தில் சிவதொண்டர் அமைப்பினால் சிவபெரு மானின் 21 அடி உயரமான தியான சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலைக்கு முற்றுமுழுதாக செந்தமிழ் திருமறையில் குடமுழுக்கு இடம்பெற்றது. உலகில் சிவ பெருமானுக்கு தமிழில் திருக்குடமுழுக்கு இடம் பெற்ற ஆலயமாகவும் சம்புநாத ஈஸ்வரத்தின் பெயர் பதிவாகி யுள்ளது.

சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முன் சம்புநாதீஸ்வரர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியதாகவும் அவ் ஆலயத்தை மையமாக கொண்டு ஒரு பெரிய பட்டினமும், சம்புகோள துறைமுகமும் இருந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. சம்புகோள துறைமுகம் காலப்போக்கில் திரிவுபெற்று தற்போது "சம்பில்துறை" என அழைக்கப் பெற்றுவருகின்றது.

சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன் இந்திய உப கண்டத்தை அரசாண்ட அசோகசக்கரவர்த்தி காலத்திலும், சேர நாட்டை ஆண்ட சேரன் செங்குட்டுவன் காலத்திலும் இத் துறைமுகம் பிரபல்யமாக விளங்கியது என்பது வரலாறு.

இலங்கையில் கஜபாகு மன்னன் ஆட்சிசெய்த காலத்தில் சேரமன்னன் செங்குட்டுவன் தனது தலைநகராகிய வஞ்சியில் இமயமலையில் இருந்து கொண்டுவந்த கல்லில் கண்ணகிக்கு சிலை செய்து கோயில் அமைத்து பெருவிழா எடுத்தான்.

கிபி 178ல் நடந்த அவ்விழாவிற்கு செங்குட்டு வனின் அழைப்பையேற்று அவன் நண்பனாகிய கஜபாகு விழாவில் கலந்து கொண்டான். அவ் விழாவில் கலந்து கொண்ட கஜபாகு மன்னன் கண்ணகியின் அற்புதங்களைக் கண்டு வியப்புற்றுத் தானும் செங்குட்டுவனைப் போல் கண்ணகிக்கு நித்தியபூசை செய்து வழிபட விரும்பி இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டினை பரப்பும் தன் விருப்பத்தை செங்குட்டுவனிடம் தெரிவித்தான் என்றும், செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும் ஒரு காற்சிலம்பையும் சந்தனமரப் பேழையில் வைத்து கஜபாகுவிற்கு பரிசளித்ததாகவும், அவற்றுடன் மேலும் பல கண்ணகி சிலைகளைப் பெற்றுக் கொண்டு சம்பில்துறை (சம்புகோள்) துறைமுகம் வந்தடைந்து அங்கு எழுந்தருளியிருந்த சம்புநா தீஸ்வரரை வணங்கி ஆலய மண்டபத்தில் இளைப்பாறி அனுராதபுரத்தை சென்றடைந்த தாகவும், சம்புநாதீஸ்வரர் ஆலத்தில் தம்மை உபசரித்த ஆலயத்தின் பொறுப்பான செட்டி யாரிடம் தாம் கொண்டு வந்த கண்ணகி சிலை களில் ஒன்றை பரிசளித்ததாகவும்,

அதனைப்பெற்றுக் கொண்ட செட்டியார் கண்ணகிக்கு ஆலயம் அமைத்து பராமரித்து வணங்கி வந்ததாகவும் வரலாறுகள் வெளிப் படுத்துகின்றன. இலங்கையில் கஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கண்ணகி ஆலயம் யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமையில் உள்ள அங் காணாக்கடவையில் அமைக்கப்பெற்றது என்றும், அதன் பின்னர் அங்கிருந்து கஜபாகு மன்னன் அனுராதபுரத்துக்கு பூநகரி வழியாகச் செல்லும் பாதைகளில் உள்ள ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைக்கப்பெற்றது எனறும், யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

காலத்திற்கு காலம் ஏற்பட்ட இயற்கை (பஞ்ச பூதங்களின்) அனர்த்தங்களினால் தென்-இந்திய கடற்கரையில் இருந்த காவிரிப்பூம் பட்டினம் இந்து சமுத்திரத்தில் சங்கமமானது போல் சம்புநாதஈஸ்வரர் ஆலயமும் சம்பில்துறை துறைமுகமும் மிகவும் சிதைவுற்று காலப்போக்கில் இந்து சமுத்திரத்தில் சங்கமமாகிப் போயுள்ள தாகவும் வரலாறு கூறுகின்றது.

இந்து சமுத்திரத்தில் சங்கமமாகிய சம்புநாதீஸ்வரர் ஆலயம் இருந்த கடற்கரை யில் பணிப்புலம் - நரசிங்க சித்தர் சுவாமி களால் பல வருடங்களுக்கு முன் ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பெற்று சம்புநாதீஸ்வரர் (சிவலிங்கம்) பிரதிஷ்டை செய்யப்பெற்று பூசைகள் நடைபெற்று வருகின்றன. பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆடிப்பூர தினத்தில் (தீர்த்த உச்சவ தினம்) இத் தீர்த்தக் கரையில் சமுத்திர தீர்த்தமாடி சம்புநாதீஸ்வரருடன் சங்கமிக்கும் புனித நிகழ்வு நடைபெறும் புனித தீர்த்தத்தலமாக இத் தீர்த்ததலம் விளங்குகினறது.
அத்துடன் காலையடி ஞானவேலாயுதரரும், சாத்தாவோலை சம்புநாதீஸ்வரரும் தீர்த்ததிரு விழா தினம் தீர்த்தமாடும் புனித தீர்த்தக் கரையாவும் சம்புநாதஈஸ்வரர் ஆலயக் கடற்கரை அமைந்துள்ளது.

இத் தீர்த்தக் கரைக்கு (சம்புநாதீஸ்வரர் ஆலயத்திற்கு) மேற்குப் பக்கமாக திருவடிநிலை என்னும் புனித தீர்த்த ஸ்தலம் அமைந்துள்ளது. இந்த தீர்த்த ஸ்தலத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கும் சுழிபுரம்-பறாளை விநாயகருக்கும் முருகப்பெருமானுக்கும் வருடா வருடம் தீர்த்த உச்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு பிரசித்தி பெற்ற சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பு 21 அடி உயரமான தியான திருச்சொரூபத்தை நிறுவி யுள்ளது.
கடந்த 17.07.2013 ம் திகதி இந்தச் திருச்சொரு பத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல அன்பர் களின் உதவியுடன் சிவதொண்டர் அமைப்பால் நிறுவப்பட்டுள்ள இந்த தியான சிலைக்கான குடமுழுக்கு விழா இவ்வருடம் 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

---

**மன்னிக்காதவன்...** **12ம் பக்கத் தொடர்ச்சி...**


அடுத்தவர்களுடைய மனநிலையில் இருந்து கொண்டு நமக்கு நேர்ந்த கசப்பான நிகழ்வை யோசித்துப் பார்த்தால், பெரும்பாலான கோபங்கள் விலகிவிடும். குறிப்பாக கணவன் மனைவி, குடும்பத்தினருக்கு இடையேயான பிணக்குகள், எரிச்சல்கள், வெறுப்புகள் போன்றவையெல்லாம் கதிரவன் கண்ட பனிபோல விலகிவிடும்.

மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ, செல்வத்தினாலோ கட்டப்படு வதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது.

உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும். மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள். மன்னிப்புக் கேட்காதவர் களையும் மன்னிக்க மறக்காதீர்கள். மன்னிப்புக் கேட்பது உறவின் உயர் நிலை.
கேட்கும் முன்னாலேயே மன்னிப்பது இறையின் முதல் நிலை !

**மன்னிப்பு மனிதனின் வெகுமதி**
**மனதில் அதையே அனுமதி !**

நீர்வை. தி.மயூரகிரி சர்மா




# ஈழத்து வன்னிச் சிவாலயங்கள்

இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கும் பழம்பெரும் நகரான அனுராதபுரத்திற்கும் இடையே விரிந்து கிடக்கும் நிலப்பரப்பை வன்னி என்று குறிப்பிடுவர். இது மேற்கே மன்னாரையும் கிழக்கே திருகோணமலையையும் எல்லையாகக் கொண்டது. இவ்விரு எல்லைகளிலும் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்கள் முறையே அமைவு பெற்றுள்ளன. இந்த வன்னிப்பகுதி சுமார் 3000 சதுரமைல்கள் கொண்ட நிலப்பரப்பாகும்.இதில் கிழக்கெல்லையான திருகோணமலையில் கோணேசருக்கு திருக்கோயில் எழுப்பிய குளக்கோட்டன் என்ற அரசன் அக்கோயிலையும் அதன் சொத்துக்களையும் பராமரிக்க தமிழகத்தின் பாண்டிய நாட்டிலிருந்து வரவழைத்தவர்களே வன்னியர்கள் ஆவர். இதே போல அவ்வப்போது நிகழ்ந்த சோழப்படையெடுப்புக்களின் போது வந்த படைவீரர்களும் இவ்வகுப்பினுள் சார்ந்தனர். இவ்வாறு வன்னியர்கள் குடியேறிய பகுதியே வன்னி எனப்படுகிறது.

இவ்வாறு வன்னியர்கள் வாழ்ந்த பெருநிலப்பரப்பான வன்னியில் பல சிவாலயங்கள் அமைவு பெற்றிருந்ததாக தொல்லியல்சான்றுகள், இலக்கிய சான்றுகள், வரலாற்றுக்குறிப்புகள் கிடைக்கின்றன.

**திருக்கேதீஸ்வரம்**

ஆதியில் நவக்கிரஹதேவர்களுள் ஒருவரான கேது பகவான் பூஜித்த ஸ்தலமாகச் சொல்லப்பெறும் கேதீஸ்வரம் வன்னியர்களின் வருகைக்கு முன்னரே சிறப்புற்றிருந்த திருத்தலமாகும். இலங்கையின் ஆதிகுடியான நாகர்களால் வழிபாடாற்றப்பெற்ற இத்தலம் திருஞானசம்பந்தராலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தேவாரத்திருப்பதிகங்களால் போற்றப்பெற்ற சிவாலயமாகும்.



இங்கே பாலாவிக்கரையில் கௌரியம்மையுடன் காட்சி தரும் கேதீஸ்வரப்பெருமானை


அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கணர வசைத்தான் திருக்கேதீச்சரத்தானே

என்று சுந்தரர் போற்றுகிறார்.

இதில் 'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' என்று சொல்வதால் அக்காலத்தில் கேதீஸ்வரக் கடலோரம் மிகவும் செல்வச்செழிப்பும், சீரும் பொலிவும் கொண்டதாகவும், மாநகராயும் விளங்கிற்று என்று கருதலாம். இராவணனின் மனைவியர் பலர். அவர்களுள், பேரழகு மிக்கவளும், பட்டத்து ராணியாக விளங்கியவளுமான மண்டோதரி சிறந்த கற்புக்கரசி. இவள் மயன் என்ற சிற்றரசனின் மகள். மயன் ஆட்சி செய்த இடத்தின் பெயர் மாதோட்டம் என்ற மாந்தை. (மாதோட்டம் பண்டைய இலங்கையின் சிறப்பு வாய்ந்த துறைமுகம்.) மண்டோதரி சிறந்த சிவபக்தை என்பதும் அவள் மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபாடு செய்ததையும் பண்டைய இதிகாசங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன..

பிற்பட்ட காலகட்டத்தில், இலங்கையைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றியபோது, அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகவும், இந்துத் திருக்கோயில்களில் நிறைந்திருந்த செல்வங்களைக் கொள்ளையடிப்பதற்காகவும் இந்துக் கோயில்கள அனைத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். அவ்வாறே, திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலும் 1505 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது. மூன்று நூற்றாண்டுகளுக்குப்பின்னர், புராதனமான இத் திருக்கோயிலின் இடிபாடுகளில் மீதமிருந்த பொருட்கள் 1894 ஆம் ஆண்டு நிகழ்ந்த புதைபொருள் ஆராய்வின்போது கிடைக்கப்பெற்றன.
அந்த ஆராய்ச்சியின்போது, திருக்கேதீஸ்வரப் பெருமானின் சிவலிங்கமும் மேலும் பல வழிபாட்டுத் திருவுருவங்களும் கூட இறைவனருளால் கிடைக்கப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் அருமுயற்சியாலும், ஈழத்துச் சைவப் பெருமக்களின் ஒன்றுசேர்ந்த உழைப்பாலும் 1910 ஆம் ஆண்டில் இத் திருக்கோயில் புதிய பொலிவுடன் சிவாகம விதிகளுக்கு இணங்க மீண்டும் கட்டப்பட்டது. பாலாவிப் புனித தீர்த்தக் குளமும் புதுப்பிக்கப்பட்டது.
ஈழத் திருநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இத் திருக்கோயிலில் இறைவனை வழிபடுவதற்காக மக்கள் கூடி வருகின்றார்கள். மகா சிவராத்திரி விழா இத் திருக்கோயிலில் வெகு விமரிசையாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## திருக்கோணேஸ்வரம்





ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான திருக்கோணேஸ்வரம் பல்வேறு சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டது. திருகோணமலை இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாகக் காணப்படுவதோடு, மிகப்பெரிய இயற்கைத் துறைமுகத்தையும் கொண்டதாக விளங்குகின்றது.

கி.பி.1624 இல் போர்த்துக்கேயர் திருகோணமலையைக் கைப்பற்றி, கோணேசர் ஆலயத்தை நிர்மூலமாக்கியபோது போர்த்துக்கேய படையின் தளபதியாக விளங்கிய கொன்ஸ்ரன்ரைன் டீசா இங்கு கைப்பற்றிய சுவடிகளைப் போர்த்துக்கலிலுள்ள லிஸ்பனுக்கு அனுப்பி வைத்துள்ளான். இவை லிஸ்பனிலுள்ள அஜூடா நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. அச்சுவடிகளில் மனுராசன் என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும், இவன் கி.மு 1300 ஆம் ஆண்டு கோணேச கோயிலைக் கட்டினான் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் 'கைலாசபுராணம்' என்னும் நூலில் மனுநீதிகொண்ட சோழ மன்னனின் வேண்டு கோளுக்கிணங்க, அவரது மகனான குளக்கோட்டு மகாராஜா இக்கோயிலைக் கட்டினாரெனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக 'முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே' என்ற கல்வெட்டு வரிகள் சான்றாகக் கூறப்பட்டுள்ளன. ஏற்கெனவே கட்டப்பட்டிருந்த கோயிலைக் குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணம் செய்ததோடு, பல திருப்பணிகளையும் செய்துள்ளான் என்பதையே பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இம்மன்னன் கோணைநாதருக்குத் தெப்பத் திருவிழா நடத்த ஒரு தெப்பக்குளத்தை ஏற்படுத்தி, அதற்குத் தெற்குப் பக்கமாக ஒரு வெள்ளை வில்வ விருட்சத்தின் கீழ் மண்டபமொன்றைக் கட்டியுள்ளான்.

தெப்பத் திருவிழாவிற்கு, கோணேசப்பெருமான் ஆலயத்திலிருந்து எழுந்தருளி, இங்கு தங்கிச் செல்வார். பின்னாளில் இம்மண்டபம் கோயிலாக்கப்பட்டு லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வெள்ளை வில்வத்துக் கோணேசர் கோயில்' என அழைக்கப்பட்டது. குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணிகளை விளக்கிக் கூறும் நூல் 'கோணேசர் கல்வெட்டு' இந்நூலில் குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வரம் கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இச்செய்திகள் யாவும் குளக்கோட்டனுக்கும் ஆலயத்திற்குமுள்ள தொடர்பை வலியுறுத்துகின்றன. இப்பெருமானை திருஞானசம்பந்தர் போற்றிப்பாடியுள்ளார். அன்னை மாதுமையாளுடன் இன்றும் கோணமலையில் அருளாட்சி செய்கிறார் கோணநாதர்.



### உருத்திரபுரீஸ்வரம்

உருத்திரபுரீஸ்வரம் ஆலயம் அல்லது பொதுவாக உருத்திரபுரம் சிவன் கோயில் என்பது இலங்கையில் கிளிநொச்சி “உருத்திரபுரம்” என்ற ஊரில் அமைந்துள்ள சிவன் கோயில்.

கிளிநொச்சி கூழாவடிச் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் வீதி சிவன் கோவில் வீதியாகும். தற்போது அவ்வீதி நீவில் என்ற கிராமத்தினூடாகவே செல்கின்றது. ஆரம்பத்தில் அப்பாதையின் இருமருங்கும் அடர்ந்த காடாகவும் வண்டில் மாட்டுப் பாதையொன்றும்தான் இருந்தது. ஐம்பது அடி உயரத்திற்கும் மேற்பட்ட வீரமரம், பாலைமரம் மற்றும் பலவகை மரங்கள் சூழ்ந்த காட்டினூடாகவே அப்பாதையில் பயணிக்கவேண்டும். மந்திக் குரங்குகள் அப்பாதையில் காணப்படும். 1950களில் அப்பிரதேசத்தில் செங்கற்களாலான இடிபாடு ஒன்று வேலாயுதசாமியால் கண்டறியப்பட்டது. பின்பு ஊர்ப்பெரியவர்களும் இணைந்து தோண்டிப்பார்த்து அவ்விடம் புராதன சிவன் கோவிலின் சிதைவுகள்தான் என்று உறுதி செய்யப்பட்டது. முதலில் வேலாயுதசாமியார் அப்பகுதியில் சிறு குடிசையொன்றில் உருவாக்கி மூலஸ்தானத்தில் வேல் மட்டுமேயிருந்த முருகன் ஆலயம் மட்டுமே அவரால் பராமரிக்கப்பட்டு வந்தது.யாழ்ப்பாணத்திலிருந்தும் பக்கதர்கள் வந்து சென்றனர். இத்தல இடிபாடுகளைக் கொண்டும், இங்கு கிடைத்த சிவலிங்கத்தின் அமைப்பைக் கொண்டும் இத்தலம் சோழர் காலத்திற்கும் முந்தையது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்...



### தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில்


போர்த்துக்கீசர் காலத்தில் திருகோணமலையின் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தைப் போத்துக்கேயர் அழித்தபோது அங்கிருந்த சில விக்கிரகங்களைக் காப்பாற்றுதவற்காக குருமார் மீட்டு எடுத்தனர். பின்னர் இந்த விக்கிரகங்களை தம்பலகாமத்தில் பிரதிட்டை பண்ணியதன் மூலம் உருவாக்கபபட்டதே இந்தக் கோவிலாகும்.

குளக்கோட்டு மன்னனால் திருகோணமலையில் அமைக்கப்பட்ட ஆதிகோணநாயகர் ஆலயம் கிபி 1624ஆம் ஆண்டளவில் போர்த்துக்கீசரால் அழித்தொழிப்பதற்கு முன்பு, அங்கு கடமையாற்றிய பாசுபதர் என்றழைக்கப்பட்ட பூசகர்களும், தொழும்பாளர்களும் இபக்தர்களும் இணைந்து இடிபட இருந்த கோயிலுக்குள் இருந்த விக்கிரகங்களை எடுத்து மண்ணில் புதைத்து வைத்தும்இ காடுகளிலும் மலைகளிலும் மறைத்துவைத்தும் வழிபாடு இயற்றி வந்ததாக புராண வரலாறுகள் கூறுகின்றன.

இவர்கள் தம்பலகாமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமி மலையில் ஆதிகோணநாயகரையும், மாதுமை அம்மையையும் வைத்து வழிபட்டு வந்தனர்.

இவ்வேளையில், கண்டியில் அரசுசெய்த ஜெயதுங்க வரராசசிங்கன் என்னும் மன்னனின் கனவில் கோணேஸ்வரப் பெருமான் தோன்றி தாம் உறைவதற்கு ஏற்றதான கோயிலை செந்நெல் விளையும் வயல்கள் சூழ்ந்த தம்பலகாமத்தில் அமைக்குமாறு கூறி மறைந்தார்.
மன்னவன் விழித்தெழுந்து கனவில் கண்டதை தனது மதிநுட்பத்தால் கண்டறிந்து சுவாமி மலையில் வைத்து வழிபட்டுவந்த ஆதிகோணநாயகரையும் மாதுமை அம்மையையும் மற்றும் உள்ள பரிவார தெய்வங்களையும் மேளதாளத்துடன் சிறப்புற எடுத்துவந்து கோயிற் குடியிருப்பு என்னும் இடத்தில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்தான் என திருக்கோணாசலப் புராணம் கூறுகிறது. இன்றும் இக்கிராமத்தில் இக்கோவில் சிறப்புடன் விளங்குகின்றது..

### ஓட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம்




வன்னிமன்னர்களின் முழு ஆணைக்குட்பட்ட இன்றைக்கு முல்லைத்தீவு என்று அழைக்கப்படும் இடத்தில் ஒட்டு சுட்டான் என்ற ஊரில் சிறந்து விளங்கும் சிவஸ் தலமாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் விளங்குகின்றது.
இங்குள்ள மூலவர் ஆவடையார் இல்லாத நிலையில் நிலத்தில் சுயம்புவாக தோன்றிய வடிவில் உள்ள சிவலி ங்கம் ஆகும். எனவே, இம்மூர்த்தி தான் தோன்றீஸ்வரர் என்று குறிப்பிடப்படுகிறார். இத்தலத்தை போர்த்துக்கேயரால் அழிக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது.
இன்றைக்கும் பழமையான திருவுருவங்களும், பண்டாரவன்னியன் என்ற அரசனினால் ஆலயத்திற்கு வழங்கப்பட்டதாக கருதப்படும் அண்டா ஒன்றும் இத்தலத்தில் உள்ளது.

### திருக்கரசை சிவாலயம்

மூதூர் என்ற நகரத்திற்கு அருகில் மகாவலிகங்கைக்கரையில் 'திருக்கரசை' என்ற சிவாலயம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்வாலயம் குறித்து 'திருக்கரசைப்புராணம்' என்ற தமிழ்ச் செய்யுள்களால் அமைந்த புராணமும் உள்ளது. தற்போது இவ்வாலயத்திற்குரிய விநாயகர், சிவலிங்கம் முதலாய மூர்த்திகள் 'அகஸ்தியர் ஸ்தாபனம்' என்று அழைக்கப்பெறும் இடத்தில் வைத்து வழிபாடாற்றப்பெறுகின்றன. இதே போலவே, மணித்தலை, அசுவகிரி, வவுனிக்குளம், சந்திரசேகரேஸ்வரம் என்ற ஊர்களிலும் சிவாலயங்கள் இருந்தன என்று அறியமுடிகின்றது.?








**கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனில் நடைபெற்ற சுவாமி விவேகாநந்தரின் 152 வது பிறந்நாள் வைபவம்!**

23.01.2014 கொழும்பு, மட்க்களப்பு, உரும்பிராய்,கிளிநொச்சி, விஸ்வமடு, ஆகிய இடங் களில்நூற்றுக்கணக்கான மாணவர்களது நடனம், நாடகம், இசை என ஆன்மீக வாசத்துடன் அரங்கேறின. அன்றய தினம் அந்நகரங்களில் சமூகசேவையில் இராமகிருஷ்ணா மிசன் ஈடுபட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.





# எல்லாம் பொய்யெனில் பொய்யும் பொய்யே!

**இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்**

குழந்தை அழுகிறது!

அதை அள்ளி அணைத்து பாலூட்டி அதன் பசியைத் தணிக்கிறாள் அம்மா.
புசியடங்கிக் கண்ணயர்கிறது மழலை.

சற்று நேரத்துக்கெல்லாம் மறுபடி அதன் அழுகுரல்.
மீண்டும் அன்னையின் அணைப்பில் அவளது பாலமுதம் பருகி உறக்கம் கொள்கிறது அது.

பால்நினைந்தூட்டும் தாயின் அன்பில் அவ்வப்போது அது பசிதீரதத்துக் கொள்கிற தேயன்றி ஒருபோதும் நிரந்தரமாக அதன் பசி தீர்வதாயில்லை.

கருவறையிலிருந்து கல்லறைவரை தொடரும் வாழ்வில் கூடவே வருகிறது பசியும்.

பசி பசி என்று அழுகின்ற வயிற்றுக்கு உண வென்று எதையேனும் கொடுத்து அமைதிப் படுத்திவிட்டு அடுத்த காரியத்தில் கவனத்தைச் செலுத்தினாலும் அடுத்த வேளைக்கான உணவுபற்றி நினைவூட்டத் தொடங்கிவிடுகிறது வயிறு.

சில பொழுதுகளுக்கு மட்டும் வேண்டுமானால் பசியைத் தாங்கிக்கொள்ளலாம்.
ஆனால் நிரந்தரமாக அதை நீக்கிவிட முடியுமா? உணவுதேடித் தந்தாலன்றி வயிற்றின் ஒப்பாரி ஓய்நது விடாது.

**ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்**
**இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒருநாளும்**
**என் நோவு அறியாய் இடும்பை கூர் என் நெஞ்சே**
**உன்னோடு வாழ்தல் அரிது (ஔவையார்)**

வாழ்க்கை என்பது எங்கிருந்து தொடங்குகிறது? வயிற்றிலிருந்துதான்!

அன்னையின் வயிற்றுக்குள் குடிகொள்ளும் நாம் அங்கிருந்து வெளிப்படும்போது நமக் கென்று ஒரு வயிற்றுடன்தான் வருகிறோம்.

நம்மோடு கூடவே வரும் வயிற்றுக்காக - அந்த வயிற்றை வளர்ப்பதற்காக - படாத பாடெல்லாம் பட்டு நம்மோடு கூடவே இன்னும் சில வயிறு களையும் சுமக்க வேண்டியவர்களாகிறோம்.

பின்னர் ஒருபொழுதில் வயிற்றின இயக்கத் தோடு வாழ்வின் இயக்கமும் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறது.
உயிருள்ளவரையில் தேடல்களோடு தொடரும் வாழ்வு- ஏன் இந்தப் பாடுபடுகிறீர்கள் என்று எவரிடத்துக் கேட்டாலும் வருகின்ற முதற்பதில் -
“எல்லாம் இந்த ஒருசாண் வயிற்றுக்கா கத்தான்!”

**சேவித்தும் சென்று இரந்தும் தென்நீர்க் கடல்கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் - போவிப்பம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம் (ஔவையார்)**

வாழ்வின தேடல்கள் அனைத்தும் வயிற்றுக்கு அடுத்தபடியாகத்தான். எவ்வளவுதான் வசதி வாயப்புக்களைப் பெருக்கிக் கொண்டாலும் வயிறு ஒத்துழைக்கா விட்டால் அத்தனையும் அர்த்தமிழந்து போய்விடு கின்றன.
ஏழ்மையும் வறுமையும் குடி கொண்டவர் களிடத்தே பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் எனில் அதனிலும் துன்பம் தருவது வசதி வாய்ப்புக்கள் இருந்தும் எதுவும் உண்ண இயலாத வயிற்றைக் கொண்டிருப்பது.

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை -தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்துபோம் (ஔவையார்)**

பசிக்கிறது உண்கிறோம்.
மறுபடி பசிக்கிறது.





அவ்வாறெனில் முதலில் உண்டவை எங்கே மறைந்தன? உண்ண உண்ணக் காணாமல் போகிற உணவினைப் போலவே உடல் வளர்க்கும் மனிதர்களும் ஒருநாள் காணாமல் போய் விடுகிறார்கள்.

நடமாடும் நாங்கள் ஒருநாள் காணாமல் போவோம் என்பதே இயற்கையின் விதியாக அமைந்திருக்கிறது.

„நிலையில்லாத ஒரு வாழ்வுக்காகவா நாம் உடலெடுத்து வந்தோம்?-„

- மரணித்த உடலங்களைப் பார்க்கும்போதெல்லாம் இந்தக் கேள்வி எழுகிறது.

„ஏல்லாம் பொய்.. எல்லாம் மாயை...!“என்று சுடலை ஞானம் பிறக்கிறது.

வயிறு பசித்தழ ஆரம்பிக்கும்வரைதான் இந்தச் சுடலைஞானம்.

„அடுத்த வேளை உணவுக்கான வழியைப்பார்!“ என்று அரிக்கத் தொடங்கும் வயிற்றுக்கு வாழ்வின் நிலையாமை குறித்து அக்கறையில்லை. அதற்கான அவசியமும் வயிற்றுக்குக் கிடையாது.

அதற்குத் தெரிந்ததெல்லாம் பசிமட்டும்தான்.

உணவளித்தால் மறையும்பசி ..அந்த உணவு சக்திமாற்றம் பெற்றபின் மறுபடி பிறப்பெடுக்கும்.

மீணடும் பசி - மீண்டும் உணவு.

உணவின்சக்தி உழைப்பாகி.. உழைப்பு உணவாகி.. பசிதீர்த்து மறுபடி உணவின் சக்தி உழைப்பாகி உழைப்பு உணவாகி...

பசி - உணவு - உணவின் வெளிப்பாடான சக்தி - சக்தியின் வடிவான உழைப்பு...

இதில் எது நிலையானது?

எது நிலையற்றது?

ஏதுவுமே நியைற்றது எனில் இது ஏன் தொடர்விதியானது?

இந்தத் தொடர்ச்சியே நிலையானது எனில் எல்லாமும் நிலையானதுதானே?

அவ்வாறன்றி எல்லாமே பொய்யெனில் இந்தப் பொய் எனப்படுவதும் பொய்தானே!


ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



Tel: 02304/ 16721

Tel: 02304- 910 9445
0177 20 16 941

துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்

தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு

Robert koch Str.5
58239 Schwerte
Germany

24 ஆண்டுகளாக நம்பிக்கை நட்சத்திரமாக
ஜொலிக்கும் ஸ்தாபனம்

Orientalische
Textilien & Schmuck

சேலைகளின் சோலை!
நங்கையரின் நந்தவனம்
புன்னகைக்கும் பொன் நகைகள்
தங்களை வியப்புக்குள்ளாக்கி நிற்கும்.


Germany

உரிமையாளர்: எஸ்.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836












# பியர் போத்தலில் நடனம் ஆடும் சிவபெருமான்

## அமெரிக்க நிறுவனத்தின் புதிய தயாரிப்பு வழி!

பியர் போத்தலில் நடனம் ஆடும் சிவபெருமான் - அமெரிக்க நிறுவனத்தின் புதிய தயாரிப்பு வழி

இந்துக் கடவுள்களுக்கு பலகரங்கள் கடவுளின் பலத்தையும் செயற்பாட்டையும் விளக்க குறியீட்டு வடிவங்களாக அமைந்து இருப்பதை. வியாபார ஸ்தாபனங்கள் அதனை தங்கள் வியாபரத்துக்கு ஏற்றவகையில் அக்குறியீடுகளை உபயோகிக்கத் தொடங்கி உள்ளன. இன்று நேற்று அல்ல பலகாலமாக நடைபெற்று வரும் ஒன்றே.


பராக் ஒபாமாவின் சக்தியைக்காட்டவும் அவருக்கு பலகரங்கள் இருப்பதுபோன்று இந்துக் கடவுளின் உருவத்தை இணைத்து அன்று படங்கள் வெளியாகின. அதே போன்று விமானப் பணிப்பெண் ஒரே சமயத்தில் பல வேலைகள் செய்யும் அழகி என்பதைக்காட்ட சரஸ்வதிபோல் பல கரங்களுடன் படங்கள் வந்தன.
நோக்கங்கள் பலவாக இருந்தாலும் மக்கள் உடன் திரும்பிப்பார்க்கும் வண்ணம் விளம்பரங்கள் இருக்க இந்த இந்துக்கடவுள்கள் அவர்களுக்கு கரம் கொடுக்கிறார்கள், இந்த வகையில் ஆடும் சிவனையும் பியர்போத்தலில் போட்டு அதற்கு சிவா என்று பெயரும் வைத்து ஆடவைத்துளனர் இதோ அச்செய்தி..
அமெரிக்க நிறுவனம் ஒன்று பீருக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்ததுடன் அவரது புகைப்படத்தை பாட்டிலில் ஒட்டியுள்ளதற்கு உலக இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அமெரிக்க, அவுஸ்திரேலிய நிறுவனங்கள் தங்களின் பீர் பாட்டில்களில் இந்து கடவுள்களின் புகைப்படங்களை போட்டு சர்ச்சையில் சிக்கின. பின்னர் அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள ஆஷ்வில் ப்ரூயிங் கம்பெனி புது சர்ச்சையில் சிக்கியுள்ளது. ஆஷ்வில் ப்ரூயிங் கம்பெனி தயாரித்துள்ள பீர் ஒன்றுக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்து சிவா பீர் என்ற பெயரில் விற்பனை செய்கிறது. மேலும் பீர் பாட்டிலில் சிவன் ஆடல் கோலத்தில் இருக்கும் புகைப்படத்தை ஒட்டியுள்ளது.

பீருக்கு சிவனின் பெயரை வைத்து அவரின் புகைப்படத்தை ஒட்டியுள்ளதற்கு இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இந்துமதத்தலைவர்கள், இந்து மதத்தில் சிவன் போற்றப்படும் தெய்வம். அவரை கோவில்களிலும், பூஜை அறைகளிலும் வைத்து பூஜிக்க வேண்டுமே தவிர வியாபார பேராசையால் அவரது பெயரையும், படத்தையும் பீருக்கு பயன்படுத்தக் கூடாது என்று கூறியுள்ளார்.

இது ஒரு புறம் இருக்க உடம்பில் பச்சைகுத்தும் கலை இன்று உலகெங்கும் வேகமாகப் பரவிவருகிறது. அதன் உருவங்களிலும் இந்துக்கடவுள்களின் உருவமே முன்னணிவகிக்கின்றன.

# மனச்சோர்வு நீங்க தென்றல் காற்றோடு

## ஓடுங்கள்! நடவுங்கள்!! விளையாடுங்கள்!!!



சதீஸ்குமார்





"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஆரோக்கிய வாழ்வை பெற உடற்பயிற்சி அவசியமாகும். மேலும் இயற்கை சூழலில் உடற்பயிற்சி மேற்கொள்ளும் போது கிடைக்கும் பலன் அதிகம்.

காற்று நிறைந்த வெளிப்புற பகுதிகளில் உடற்பயிற்சி மேற்கொள்வது மனச் சோர் வினை தடுக்கும் என்று கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. நாம் ஏதோ ஓரிடத்தில் வசித்தாலும் கூட ஒரு நாளின் சில நேரங்களிலாவது வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி (ஓடுவது,நடப்பது) செய்வது சிறப்பானதாகும்.

வெளியில் குளிரான சூழ்நிலை நிலவும் போது நாம் நமது வசிப்பிடத்தின் உள்ளே உடற்பயிற்சி செய்வது எளிதானது.

வெளியே செல்வதை முற்றிலும் தவிர்ப்போம் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அந்த குளிரான நாட்களிலும் வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி மேற்கொள்ளும் போது நம்மை நாமே புதியவர்களாக உணர்வோம். தட்ப வெப்ப நிலையில் ,அதிக குளிர் காணப்படும் போது, உடற்பயிற்சி செய்ய ஏதுவான உடைகளை அணிவதும், வியர்க்கும் வரை உடற்பயிற்சி செய்வதும் நம்மை கதகதப்பாக வைத்து கொள்ள உதவும். இந்த அனைத்து காரணங்களுடன் வெளிப்புற உடற்பயிற்சி மன சோர்வினை தடுக்கும். அனைத்து சூழ்நிலைகளிலும் வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி செய்வது சாத்தியமற்றது. எனினும் குறைந்தபட்ச முயற்சியாவது செய் யலாம். காற்றோட்டமாக உடற்பயிற்சி மேற் கொள்வது மனச்சோர்வினை தடுக்கும் என்பதற் கான காரணங்கள்!!!

**வைட்டமின் டி வெளிப்பாடு:** வெளிப்புற உடற் பயிற்சி மனச்சோர்வினைக் குறைக்குமென்று கூறுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் முதன்மையான காரணம் வைட்டமின் டி வெளிப்பாடு. நமது மனோநிலையை உயர்த்தி ஹார்மோன்களை ஊக்கப்படுத்தும் செரோடோனின் உற்பத்திக்கு உதவுகிறது. மேலும் மன சோர்வினை ஆரம்பத்திலேயே தடுக்கிறது.

மேலும் வைட்டமின் டி நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகமாக்குகிறது. மற்ற எந்த மூலகாரணத்தையும் விட சூரியனிடமிருந்து பெறபடும் வைட்டமின் டி எளிதாக உறிஞ்ச படுகிறது. சூரியன் வெளிப்பட்டாலும், இல்லா விட்டாலும், மேக மூட்டமாக இருந்தாலும் சரி, வெயிலாக இருந்தாலும் சரி, வெளிப்பகுதியில் காணப்படும் ஒளியிலிருந்து நாம் அதிகமான வைட்டமின் டி பெற்றுகொள்ளலாம். இதன் பலனாக வெறும் அரை மணி நேரம் வெளியில் செலவளிப்பதன் மூலம் மன சோர்வினை தவிர்கலாம். நாம் வெளியே உடற்பயிற்சி மேற்கொள்ளும் போது, இயற்கை காட்சி மற்றும் சுற்றுப்புறச்சூழல் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொள்கிறோம்.




டோட்முண் நகரில் மாபெரும் ராஜ முத்திரை!

**S.K.Silks & Gold Paraadise**

பட்டுச் சேலைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
நாடுங்கள்...

என்றும் புதியது
அழகின் இரகசியம் அது!

Mr.P.Sritharan
Proprietor

Adler str 33 - 44137 Dortmund

Tel:0231 9501 647

மேலும் இது மூளையிலுள்ள நியூரான்களை ஒருங்கிணைக்கிறது. என்டோர்பினை தூண்டுகிறது. அந்த நாளின் எஞ்சியுள்ள பகுதிக்கான படைப்பாற்றலை நமக்கு மேம்படுத்த உதவுகிறது.

வெளியில் குளிராக இருந்தாலும் கூட புத்தம் புதிய காற்று நமக்கு தரும் உணர்வு மிக சிறப்பானது. ஒவ்வொரு நாளும் சிறிதளவேனும் புதிய காற்றினை உணர்வது நமக்கு நல்லது என்று அறிவுறுத்தப்படுகிறது. குளிர் காலத்தில் வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் நாம் இவற்றை சாத்தியமாக்கி கொள்ளலாம். இதயத்திற்கான பயிற்சிகளை வெளியில் மேற்கொண்டு பின்பு உள்ளே யோகா, எடை தூக்குவது போன்ற பயிற்சிகளில் ஈடுபடலாம். இதற்காக வெளியில் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டாம் என்று அர்த்தமில்லை. குளிர்காலமாக இருந்தாலும் வெளியில் தான் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்றும் அர்த்தமில்லை. நாம் அவற்றை தவிர்த்து விடலாம் எனினும் தட்பவெப்ப நிலை ஏற்று கொள்ள கூடிய வகையில் உள்ள நாட்களை நமக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

**நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது!**

வெளியில் உடற்பயிற்சி மேற்கொள்வது நமது நோய் எதிர்ப்பு மண்டலத்தை ஊக்கப்படுத்துகிறது. நமது நோய் எதிர்ப்பு மண்டலம். களைத்து போகும் போது, மன சோர்வு உண்டாகும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதை தவிர்த்து நமது நோய் எதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்த ஒவ்வொரு நாளும் நடைப்பயிற்சி உள்ளிட்ட சில பயிற்சிகளை சில நிமிடங்களாவது வெளிப்புற பகுதியில் மேற்கொள்ள வேண்டும்

தசை கட்டுமானம் வெளிப்பகுதியில் உடற்பயிற்சி மேற்கொள்வது மனச் சோர்வினை தடுக்கும் என்று கூறப்படுவதற்கு மற்றொரு சிறப்பான காரணம் தசை கட்டுமானம் ஆகும். பொதுவாக வீட்டினுள் உடற்பயிற்சி செய்யும் போது தவிர்க்கப்படும் ஒன்றான தசை கட்டுமானத்திற்கு இது உதவுகிறது. வெளிப்புறத்தில் உடற்பயிற்சி மேற் கொள்ளும் போது முக்கியமாக சீரற்ற தளத்தின் மீதோ மேற்கொள்ளப்படும் நடைப் பயிற்சியின் போது தசைகள் ஈடுபடுவது அவசியமாகிறது. இதனால் உடலின் ஆற்றல் மற்றும் என்டொர்ஃபின் ஆகிய வற்றை ஊக்கப்படுத்தப்படுகிறது. தசைகள் கடினமான உடற்பயிற்சியை மேற்கொள்ளும் போது உடலின் மெட்டாபாலிசம் மேம்படுத் தப்பட்டு, அதிக ஆற்றல் பெறப்படுகிறது. இதனால் இயல்பாகவே, மனச் சோர்வு தடுக்கப்படுகிறது, **ஒரு நாளின் துவக்கத்தில் செய்யப்படும் உடற்பயிற்சி அந்நாளின் எஞ்சியுள்ள பொழுதை அற்புதமாக்கிவிடுகிறது.** எனவே வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்த ஒன்றாகும். மேலும் சரிவான மலை பிரதேசங்களில் பயிற்சி மேற்கொள்ளும் போது, நமது உடலின் அதிகமான கலோரிகள் எரிக்கப்படுகிறது. பருவநிலை மாற்றம் வெளிப்புற பகுதியில் உடற்பயிற்சி மேற்கொள்வது மனச்சோர்வினை தடுக்கிறது என்று கூறப்படுவதற்கு மற்றொரு தனித்துவமான வழியாதெனில் உடற்பயிற்சி மேற்கொள்ளும் போதே பருவ நிலை மாற்றதை காண முடியும் என்பது தான். நாம் அனைவருமே எப்போது தீவிரமாக பருவ நிலை மாற்றத்தை எதிர் நோக்குகிறோம். பனி விழும் காலம் குளிர்காலமாக மாறுவதையும், குளிர்காலம் வசந்த காலமாக மாறுவதையும் பார்த்து புத்துணர்ச்சி கொள்ளலாம். இந்நிலையில் பருவ நிலை மாற்றங்களை பாராட்டி, காற்றில் நிகழும் மாற்றங்களை விரும்பி கற்கலாம். இது நாம் பெறுகின்ற மனோ நிலைகளில் மிகவும் சிறந்தது. சிறப்பாக குறிப்பிட வேண்டுமெனில் இலைகள் மரத்திலிருந்து உதிர்வதையும் மீண்டும் தன் வாழ்விற்கு திரும்புவதையும் காண்கிறோம். எப்பொழுதெல்லாம் முடிகிறதோ அப்பொழுதெல்லாம் இயற்கை நமக்கு வழங்கும் நன்மைகளை பெற்றுகொள்ள வேண்டும்.

இயற்கை ஒரு மனச்சோர்வு நீக்கிகள் ஆகும். நச்சு பொருட்களை குறையுங்கள் நாம் நீண்ட காலமாக வீட்டின் உள்ளேயே தங்கியிருப்பது, நமக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒன்றாகும் அனைத்து வீடுகளிலும், தூய்மையாக்கிகள், வெப்பகாற்று, இரசாயன வர்ண பூச்சுக்கள், மற்றும் பிளாஸ்டிக் பொருட்களினாலும் கூட நச்சு உண்டாகும்.

வீட்டின் உள்ளேயே தங்கியிருக்கும் நேரத்தை குறைத்து கொண்டு வெளியே வர வேண்டும். இவ்வாறு செய்வது காற்றோட்டமில்லாத நச்சு காற்று நிறைந்துள்ள பகுதி உண்டாக்கும் மனச்சோர்வினை நீக்கும். இதனை பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்வதில்லை. குளிர் காலத்தில் வெளியில் உடற்பயிற்சி செய்வது என்பது வேடிக்கையானது அல்ல. ஒருமுறை செய்ய ஆரம்பித்த பிறகு சுத்தமான காற்று, நமக்கு மகிழ்ச்சியை தரும். இத்தனை அதிகமான பலன்கள் கிடைக்கும் போது உடற்பயிற்சி மேற்கொள்ள இயந்திரங்களை சார்ந்திருப்பதை விடுத்து இயற்கையை சார்ந்திருப்போமே.

# பண்டித மணியும் சிவத்தமிழ்ச் செல்வியும்.



சைவத்திரு கா. சிவபாலன்

கடந்த 19ம் நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றிய பெருமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான். நூலவரைப் போன்று பிரமச்சரிய விரதம் பூண்டு தொண்டாற்றியவர்களில் பண்டிதமணி அவர்களும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களும் என்பதைக் குறிப்பிட லாம். இவர்கள் இருவரும் நாவலர் பெருமான் மீது அதி உயர்ந்த பற்றுதல் கொண்டவர்கள். நாவலர் தர்மத்தையும் நாவலர் நீதியையும் இன்றைய சமுதாயத்துக்கு சிந்திக்க வைத்த வர்கள். சமுதாயத்தை சிந்தித்த இவர்கள் இருவரினதும் வாழ்வும் பணியும் தனித்தனியாக ஆராயப் படத்தக்க விடய பரப்புடையவர் களாகும்.
நாவலர் வழிவந்த பண்டிதமணி அவர்களையும் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரையும் சந்திக் கும் பேறு எல்லோருக்கும் கிடைப்பது அரிது.

பண்டிதமணியைச் சந்தித்தவர்கள் சிவத்தமிழ்ச் செல்வியவர்களைச் சந்திக்கவில்லை.
சிவத்தமிழ்ச் செல்வியைச் சந்தித்தவர்கள் பண்டிதமணி அவர்களைச் சந்திக்கவில்லை.

பண்டிதமணி அவர்களின் தொடர்பு என்அறிவு வெளிப்பட்டு அந்த மகானைச் சந்தித்த நாள் முதல் இறுதிநாள் வரை அன்னாரின் பணிகளை யும் நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுத் தெண்ணிப் படித்து இருக்கிறேன். இவற்றினால் தான் தமிழைப் பெற்றேன்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் இறுதிக் காலம் வரையுள்ள முப்பது ஆண்டுகள் அவாகளின் சைவப் பிரசங்கங்களைக் கேட்டும், அவர்கள் தன்னிகரில்லாத் தனிப்பெருந் தலைவராக அமர்ந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலை நடாத்தி மகாசக்தி வாய்த துர்க்கை அம்பாளின் பெருமைகளையும் பெரும் புகழையும் சர்வதேச சமூகத்தின் முன்பாக நிலைநாட்டி நிதி நிர்வாக தலைமைத்துவத்தின் கீழ் தொண்டாற்றி பெறும்பேறு பெற்றேன்.

இதனால் சைவாலயபரிபாலனத்தைக் கற்றுக் கொண்டேன். இவர்களுடைய தொடர்பு பூர்வ புண்ணிய பேறு என்றே கருதுதகின்றேன்.

பண்டிதமணியைச் சந்தித்த தழிழருவி ச.சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் ஒரு நாள் உரையாடலின் போது சிவத்தமிழ்ச் செல்வி பற்றி ஒரு வினாவும் கொடுத்து விடையும் பின்வருமாறு கூறினார்.
"யாழ்ப்பாணத்து நல்லை சுவாமிநாதத் தம்பிரா னின் கதாப்பிரசங்கமும், சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் சொற்பொழிவும் ஏன் தமிழ் நாட்டில் எடுபடுகின்றன என்றால்,

முதலா வது இவர்கள் இருவர் பேச்சிலும் பொருளை ஒழுங்குபடுத்திப் பேசுதல், இரண்டா வது கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டுப் பேசுதல், மூன்றாவது யாழ்ப்பாணத்து தமிழின் தனிச்சிறப்பு, நான்காவது ஒரு எழுத்தையும், ஒரு சொல்லையும் சிதையாது விழுங்காது உச்சரித் தல் என்பர் பண்டிதமணி அவர்கள்.

1899ஆம் ஆண்டு பிறந்த பண்டிதமணி அவர்களும் 1925ம் ஆண்டு பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும் தமிழ் மொழியை முறையாக எழுத்தெண்ணிக் கற்றுக் கொண்ட பண்டிதமணியும் பண்டிதையும் நாடறிந்த தமிழ் அறிஞர்கள்

சிவத்தமிழ்ச் செல்வி பற்றி பண்டித மணி அவர்கள் பல்வேறு தமிழ் சமய விழாக் களிலும், பாராட்டத் தவறுவதில்லை. மேலும் 1971ஆம் ஆண்டு அம்மையார் மலேசியா, சிங்கப்பூர் பயணம் செய்து சிவத்தமிழ் தூது செய்த 27 சொற்பொழிவு நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையிலும், 1981ஆம் ஆண்டு துர்க்காதேவி மகா கும்பாபிஷேக மலருக்கு வழங்கிய வாழ்த்துரையிலும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் நடாத்திய சென்னை சைவசித்தாந்த சமாச பவள விழாவுக் கும் வாழ்த்திய வாழ்த்துரைகள் பண்டிதமணி அவர்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பணிகளுக்கு மகுடம் வைத்தமையை அறிந்து கொள்ளலாம்.

பண்டிதமணி அவர்கள் மீது கொண்ட பெருமதிப்பை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள் பாராட்டிப் போற்றத் தவறுவதில்லை.


யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிலும் நடைபெறு கின்ற சான்றோர் வரிசையில்" என்ற நூலில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப் பிள்ளை அவர்கள்" என்றொரு அத்தியாயம் எழுதியுள்ளார். மேலும் இந்நூலில் மாதகல் நுணசை முருகன் கோவில் மகோற்சவ தொடர் சொற்பொழிவைப் பாராட்டி தமக்கு பண்டிதமணி அவர்கள் "செஞ்சொற் கொண்டல்" என்னும் பட்டம் வழங்கிய செய்திகளையெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு பண்டிதமணி அவர்கள் சிவபதம் அடைந்தபோது திரு நெல்வேலி கலாம்ணடபத்தில் நிகழ்த்திய அஞ்சலிப் பேச்சு அனைவரையும் கண்கலங்க வைத்தது. மேலும் 1988ஆம் ஆண்டு "மட்டுவில் தந்த பண்டிதமணி சி.க.நூலுக்கு வழங்கிய வாழ்த்துரை 1999ஆம் ஆண்டு பண்டிதமணி முத்திரை வெளியீட்டு மலருக்கு வழங்கிய செய்தி, 1989இல் பண்டிதமணி நினைவு மலருக்கு வழங்கிய சிறப்புக் கட்டுரை போன்றன எல்லாம் பண்டிதமணிக்கு வழங்கிய பெருமதிப பைக் காட்டி நிற்கின்றார் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

இங்கு பண்டிதமணி அவர்கள், கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, என்ற வாக்குக் இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். தாய்நாட்டிரும், சேய் நாட்டிலும், மலேசியா முதலிய தமிழ் நிலங் களிலும் உள்ள சைவ நிலங்களிலும் பண்டிதை அவர்கள் செய்த சைவப்பிரசங்கங்கள் பல ஆயிரக்கணக்கானவை.

ஆங்காங்கு அவாகளுக்கு வழங்கிய பட்டங் களும், பாராட்டுகளும் பிரசித்தமானவை கனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக சைவத்துக்கும். தமிழுக்கும் பெருந் தொண்டு ஆற்றி 87 ஆண்டுகள் வாழ்ந்த பண்டிதமணியும், 83 ஆண்டுகள் வாழ்ந்த சிவத்தமிழ்ச் செல்வியும் எங்கள் காலப்பகுதியில் உலகுக்காக வாழ்ந்து வரலாறு ஆகிவிட்டார்கள்.

நமது பெருமக்களை என்றும் நினைவு கொள்வோமாக.



லண்டன் ஈலிங் அம்மன் ஆலயத்தில்.சிவத்தமிழ்விழா 2005

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாவினை 2005 தை மாதம் தாயகத்திலும், மற்றும் யோ்மனி, இங்கிலாந்து, கனடா, ஆகிய நான்கு நாடுகளில் சிவத்தமிழ் சஞ்சிகை விழா எடுத்து மகிழ்ந்தது.


T.T.S.Brothers GmbH&Co.KG



உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
ஆடை அணிகலன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846




Tel: 0208 444 89 53 Mobil: 0172 2607 388

கடிவாளம் 10ம் பக்கத் தொடர்ச்சி

காரணம், மனத்தை நன்றாக அறிந்து கொண்டவன்தான், உலகை வெல்ல முடியும் எதையும் வெல்ல முடியும் என்று உலகம் கருதுகிறது ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும் கருதுகிறது.

திருமூலர் திருமந்திரத்திலே சொன்னார்:

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமற் தானே கெடுகின்றான்.
தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே, அர்ச்சிக்கத் தானிருந் தானே!'

தானே தனக்குப் பகைவனும், நண்பனும் தானே
தனக்கு மறுமையும், இம்மையும் தானே
தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும் தானே
தனக்குத் தலைவனும் ஆமே!'

தன்னை அறிந்திருந்தால் அவனுக்குக் கேடில்லை.மனிதன் எதனாலே கெடுகிறான்? தன்னை அறியாமலே கெடுகிறான்.

தன்னை அறியக்கூடிய அறிவு மட்டும் அவனுக்கு வந்து விடுமானால், எல்லோரும் தன்னை அர்ச்சிக்கும்படியும், தானே தனக்குப் பூஜை செய்யும்படியும் வளர்ந்து விடுவான்.

மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற'
என்றான் வள்ளுவன்

உடம்பு களங்கப்பட்டிருக்கலாம் ஆனால், மனது களங்கப்படாதிருக்குமானால், அந்த உணர்வு கூடப் பரிசுத்தமாக ஆகிவிடுகிறது.

முதலில் யார் மீதாவது நீ குற்றம் சாட்ட விரும்பினால், உன் மீதே குற்றம் சாட்டிப் பழகு. ஒரு கண்ணாடியின் முன்னால் நின்று கொள். நீ குற்றவாளி, நீ குற்றவாளி, நீ குற்றவாளி' என்று மூன்று முறை சொல்.

நீ சொல்வது கண்ணாடியைப் பார்த்து கண்ணாடி சொல்வது, உன்னைப் பார்த்து.

நான் குற்றவாளி, நான் தவறானவன், நான் சிறியவன், நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், நான் மரியாதையாக இருக்க வேண்டும்' என்றெல்லாம் உணர, தன்னை உணர்ந்து கொள்கின்ற தன்மை என்பது ஒரு லயமாக, ஒரு ராகமாக, ஒரு சுருதியாக, ஒரு பாவமாக நம் மனதுக்குள்ளேயே எழுந்து விடுகின்றது.

எப்போது மனிதன், தன்னை உணர்ந்து கொண்டு விடுகிறானோ, அப்போது மனது பாடமாகி விடுகிறது.

பச்சை இலை தான் புகையிலை. அது பாடம் செய்து வைத்தால் எவ்வளவு நாட்கள் இருக்கின்றது?

இதுதான் மனத்தைப் பாடம் பண்ணுகிற முறையாகும்.

மனத்தைப் பாடம் செய்து கொண்டு விட்டால், தன்னை உணருகின்ற தன்மை, மிகச் சுலபமாக வந்து விடும்.

ஆயிரம் பேர் கூடி, நம் மீது குற்றம் சாட்டினால் கூட, நமக்குச் சிரிப்பு வரும்.

பத்தாயிரம் பேர் கூடி நமக்குப் புகழ் மாலை சூட்டினாலும், நமக்கு உடம்பிலே புல்லரிப்பு ஏற்படாது.

அதனால்தான், மனத்தைப் பாடம் செய்து கொள்ள வேண்டும் என்றனர் ஞானிகள். கீழே உள்ள பாடலைப் பாருங்கள்:

**மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்**
**வனத்தகத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறார்**
**மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்**
**முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுத் திருப்பரே!**

- சிவவாக்கியர்மனத்திலே அழுக்கு அற்றுப் போகாதவன், மனது பாடமாகாதவன், எதற்கும் வளைந்து கொடுக்கிறவன், எதிலும் ஆசை வைக்கிறவன், காட்டுக்கு ஓடினாலும் கூட, அவனுடைய ஆசை சுற்றிக் கொண்டே இருக்கும்.

அந்தக் காட்டிலே இருக்கின்ற மரங்களையும், சுற்றிலும் இருக்கின்ற நிலங்களையும் பார்த்தால், இதில் கொஞ்சம் நமக்கு இருக்கக் கூடாதா என்று தோன்றும்.

எவளாவது ஒரு பெண் வழியிலே போனால் கூட, இவளை வைத்து நாம் குடும்பம் நடத்தக் கூடாதா?' என்று தோன்றும்.ஓடியது காட்டுக்கு பாடியது துறவறப் பாட்டு ஆனால், தேடியதோ பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை. காட்டுக்குப் போனாலும் கூட மனது அப்படி ஆகி விட்டால், அந்த லயத்துக்கு ஆட்பட்டு விட்டால், அது இந்த உடம்பையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய் விடுகிறது.


ஆனால், மனது பக்குவப்பட்டு விட்டால், அவன் காட்டுக்குப் போக வேண்டியதில்லை' என்பது தான் சிவவாக்கியர் வாக்கு. அவன் அங்கே இருக்கட்டும், பங்களாவிலே இருந்தாலும் அதைக் காடாக மாற்றிக் கொள்ள முடியும் காட்டிலே இருந்தாலும் அதைப் பங்களாவாக மாற்றிக் கொள்ள முடியும்.

ஓடுகின்ற வண்டிக்குள் இருந்து கொண்டே, ஓடாமல் இருப்பவனே உண்மை சந்நியாசி உண்மையில் மனத்தை அடக்கியவன்.



# சிதம்பர ரகசியம்!!!






சிதம்பர ரகசியம் என்பதற்கு பலரும் பற்பல கதைகள் கூறிவரும் நிலையில், சிதம்பரம் நடராஜர் கோயிலில் நிறைந்துள்ள அதிசயங் களும், ஆச்சரியங்களுமே இதற்கு பதிலாக அமைகின்றன.

அதாவது இந்த நடராஜர் கோயில் அமைந்துள்ள இடமானது உலகின் பூமத்திய ரேகையின் மையைப் பகுதி என்று சொல்லப்படுகிறது. இதுபோல நடராஜப் பெருமான் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டம் என்ற கோலம் காஸ்மிக் நடனம் (cosmic dance) என்று பல வெளிநாட்டு அறிஞர் களால் அழைக்கபடுகின்றது. மேலும் மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப் பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலின் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் உள்ள 9 வாயில்களை குறிக்கின்றது. இவைபோன்று இன்னும் பல சிதம்பர ரகசியங்கள். படித்துப் பாருங்கள் :

**பஞ்சபூத ஸ்தலங்களுக்கு ஒரு யாத்திரை!**

பஞ்சபூத ஸ்தலம் பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாயத்தை குறிக்கும் ஸ்தலமாக சிதம்பரம் நடராஜர் கோயில் அறியப்படுகிறது. பஞ்சபூத கோயில்களில் ஆகாயத்தை குறிக்கும் தில்லை நட ராஜர் ஆலயம், காற்றை குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில், சரியாக 79 டிகிரி, 41 நிமிடம் கிழக்கு தீர்க்க ரேகையில் அமைந் துள்ளது. இன்று கூகுள் மேப் உதவியுடன் வானத்தின் மேலிருந்து பார்ப்பதை போன்று பார்த்தால் மட்டுமே இந்த துல்லியம் விளங்கும். அனால் இது அன்றைக்கே கணிக்கப்பட்டது பொறியியல், புவியியல் மற்றும் வானவி யியலின் உச்சகட்ட அதிசயம்.

மூலவர் ஏனைய இந்து ஆலயங்களில் லிங்க வடிவமாக இருக்கும் சிவபெருமான், இவ்வால யத்தில் நடனமாடும் நிலையில் காட்சி தருகிறார்.

இதன் காரணமாகவே பரதநாட்டியம் என்னும் நாட்டியக்கலைக்கு முதற்கடவுளாக நடராஜரை வணங்குகின்றனர்.

**பாதாளத்தில் கருவறை!**

நகரின் மையப் பகுதியில் ஒரு பிரமாண்ட நீள்சதுர அமைப்பில் வீற்றிருக்கும் இந்த கோயிலின் ஒட்டுமொத்த வளாகமும் கோட்டைச்சுவர்கள் போன்று 10 மீ உயரம் கொண்ட கருங்கல் சுவர்களால் பிரிக் கப்பட்ட அடுத்தடுத்த பிரகாரங்களாக கீழிறங்கி கொண்டே செல்கிறது. அதாவது கோயிலின் கருவறை அமைப்பு தரைமட்டத்திற்கு கீழே பாதாளவெளியில் வீற்றிருக்கும் படியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

பொன் கூரை நடராஜர் கோயிலின் கருவறை அற்புதமான கலையம்சம் நிரம்பிய கருங்கல் சிற்ப வேலைப்பாடுகளுடன் தங்கவிமானத்தோடு காட்சியளிக்கிறது. ஆதித்ய சோழனின் மகனான பராந்தக சோழன் இந்த தங்கவி மானக்கூரையை அமைத்ததாக தெரியவரு கிறது. இதன் மூலம் 'பொன்வேய்ந்த சோழன்" எனும் பட்டப்பெயரும் அவருக்கு கிடைத்திருக் கிறது. பொற்கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக் கின்றது.

பொன்னம்பலம் பொற்கூரை வேயப்பட்ட கனகசபை, பொன்னம்பலம் எனவும் அழைக்கப் படுகிறது. இந்த பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன. இவை 28 ஆகமங் களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன. 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளை கொண்டுள்ளதுடன், இது 64 கலைகளை குறிக்கின்றது.

தொடர்ச்சி 29ம் பக்கம்.



பிரகாரங்கள் மனிதரின் உடலும் கோயில் என்பதனை விளக்கும் வகையில் சிதம்பரம் நடராசர் கோயில் அமைந்துள்ளது. மனித உடலானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து சுற்றுக்களைக் கொண்டது. அதற்கு ஈடாக சிதம்பரம் நடராசர் கோவிலில் ஐந்து திருச்சுற்றுகள் என்னும் பிரகாரங்கள் உள்ளன.





மனிதன் இதயமும், கோயில் மூலவரும்! மனிதருக்கு இதயம் இடப்புறம் அமைந்திருக கிறது. அதேபோல அக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறை கோயிலின் நடுப்புள்ளியில் இல்லாமல் இடதுபுறமாகச் சற்று நகர்ந்து இருக்கிறது.
சுவாசமும், ஓடுகளும்! ஒரு மனிதர் ஒரு நாளைக்கு 21,600 முறை இதயத்தில் உதவியால் மூச்சுவிடுகிறார். எனவே கோயிலின் இதயம்போல அமைந்திருக்கும் கருவறையின் மீதுள்ள கூரை 21,600 ஓடுகளால் வேயப்பட்டு இருக்கிறது.

நரம்புகளும், ஆணிகளும்! மனிதருக்குள் 72,000 நாடிகள் ஓடுகின்றன. அதேபோல கருவறைக கூரையில் 72,000 ஆணிகள் அறையப்பட்டு உள்ளன.
சாஸ்திரங்களும், புராணங்களும்! அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங் களையும், அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றது.

நாட்டியாஞ்சலி சிவராத்திரியின்போது நடராஜர் கோயிலில் நாட்டியாஞ்சலி எனும் நடன ஆராதனை நிகழ்ச்சி வெகு சிறப்பாக ஐந்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. அப்போது உலகின் பல்வேறு இடங்களிலிருந்து வரும் நடனக்கலைஞர்களும், நாட்டியம் பயிலும் மாணவர்களும் நாட்டியத்தை நடராஜருக்கு அர்ப்பணமாக செலுத்துகின்றனர். இவ்வாறு நாட்டியார்ப்பணம் செய்வதை பெருமையாகவும், பேராகாவும் கருதுகின்றனர்.

கல்வெட்டுகள் பக்தி இலக்கியத்திலும், சங்க இலக்கியத்திலும் தில்லை சிவனைப் பற்றி பாடப்பெற்றுள்ளது. சோழ மன்னர்கள் இந்த ஆலயத்திற்கு பணி புரிந்துள்ளனர் என்பதை இங்குள்ள ஆலயத்தில் உள்ள கல்வெட்டுகளிலிருந்தும், பொற்கூரையினாலும் நாம் அறிந்துகொள்ள முடியும். சோழ மன்னன் கோயிலுக்குள் காணப்படும் சோழ மன்னன் ஒருவனின் சிலை.) சோழர்களுக்குப்பின் பாண்டிய மன்னர்களும், கிருஷ்ண தேவராயரும் வழிப்பட்டதாகவும் பணிகள் பலபுரிந்ததாகவும் கல்வெட்டுகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.








யேர்மனியில் புகழ்பெற்ற
மொத்த விற்பனை நிலையம்
StaR-Impex
StaR-Impex
அபிஷேகப் பொருட்களுக்கு இன்றே நாடுங்கள்
வீபூதி சந்தனம் சாம்பிராணிக் குச்சி
குத்துவிளக்குத்திரி வாசனைத்திரவியங்கள்
அகல்விளக்குகள் இன்னும் இன்னும்
தேவையான அனைத்தும்.
ஆலயத்திற்கும், இல்லத்தின் மங்கலகரமன வைபவங்களுக்குமான
பூஜைப் பொருட்கள். மற்றும்திருவிழாக்களுக்கு வேண்டிய அபிஷேகப்
பொருட்களுக்கும் என்றும் நாடுங்கள்.
Tel.: 0231/8602696 Mobil: 0172/2183703
Fax: 0231/8602698 E-Mail: star-impex@live.de
Kipperstr. Tor 3
44147 Dortmund

# இலங்கையில் நீரில் முழ்கி எழுந்த மும்மதங்கள்!






## மவுசாகலை நீர் தேக்கத்தால் மூடப்பட்ட
## பௌத்த விகாரை, இந்துக் கோவில் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்

இலங்கையில் கடந்த மாசிமாதம் மவுசாகலை நீர் தேக்கத்தால் மூடப்பட்ட பௌத்த விகாரை, இந்துக் கோவில் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் வற்றியதில் அவை மீண்டும் மக்களின் கண்களுக்கு தெரியவந்தது.
மஸ்கெலியா பழைய நகரில் இருந்த பௌத்த விகாரை, இந்து கோவில், முஸ்லிம் பள்ளி ஆகியன மவுசாகலை நீர் தேக்கம் ஆரம்பிக்கும் போது குறித்த மூன்று வழிபாட்டுத்தலங்களும் நீரினால் மூடப்பட்டது.
மவுசாகலை நீர் தேக்கத்தின் நீர்மட்டம் 140 அடியிலிருந்து 40 அடிக்கு குறைவடைந்ததால் மூன்று தேவாலயங்களும் தற்போது மக்களின் பார்வைக்கு தெரியவந்துள்ளது.

தற்போது மக்கள் பௌத்த விகாரை, இந்து கோவில், முஸ்லிம் பள்ளி ஆகிய வாழிபாட்டுத்தலங்களுக்கு பூஜை நடத்தி வழிப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீர்மட்டம் குறைவடைந்ததால் மக்களை மிகுந்த அவதானத்துடனும், மற்றும் மவுசாகலை நீர் தேக்கத்தில் குளிக்க செல்ல வேண்டாம் எனவும் மின்சாரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



துங்கக் கரிமுகத்து
தூமணியே-நீ
எனக்கு சங்கத்
தமிழ் மூன்றும் தா

Geethan

ஓவியம்:கீதன் அரவிந்தன்
வயது 6

குமரிக்கண்டம் கடலில் மூழ்கியது அதற்கான ஆதரங்கள் முகப் புத்தகத்தை ஆக்கிரமித்து இருக்கும் வேளை கண்ணெதிரே நீரில் முழ்கி, கண்ணெதிரே வெளி வந்த இந்த ஆலயங்கள் மக்கள் மனங்களில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதனை உணரமுடிகிறது.
நன்றி: வீரகேசரி:

# தெருமூடி மடங்களும் முடிசூடா மன்னரும்





'Sivaththamil" M.K.S. Sivakumaran Brinker Höhe 13 - 58507 Lüdenscheid - Germany